# உளத்தூய்மை

## மூலம்: ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலி ரழியல்லாஹு அன்ஹுஅவர்கள் எழுதிய இஹ்யா உலூமுத்தீன்

## தமிழில்: மௌலவி S. அப்துல் வஹ்ஹாப் பாகவி அவர்கள்

### 1. உளத்தூய்மை

மனிதன் உயர்வதற்கும் அவன் தாழ்வதற்கும் உள்ளம்தான் காரணம். நேர்மையான உள்ளம் கொண்டவன் நேரிய வழியில் செல்கிறான். நற்பண்புகளையும் உயர்ந்த குணங்களையும் தன்னுள் உண்டாக்கிக் கொள்கிறான். நல்ல காரியங்களை விரும்பிச் செய்கிறான். தீய உள்ளம் கொண்டவன் நேர் எதிரானவன். அவனிடம் உயர் குணங்களையும் நற்பண்புகளையும் எதிர்பார்க்க முடியாது. நேரிய வழியும் அதன் உயர்வும் அவனுக்குத் தெரியாது.

அறிஞர்கள் நற்குணம் பெற்றிருந்தார்கள். திருத்தூதர்கள் அனைவரும் உயர்ந்த பண்புடையவர்களே. அவர்களின் உள்ளங்கள் நீரோடையைவிடத் தெளிவானவை. அவற்றில் அழுக்குக்கு இடமில்லை. கறைபடிய மார்க்கமில்லை. இத்தகைய குணங்களுக்கெல்லாம் அண்ணல் நபியவர்கள் நிலைக்களனாக விளங்கினார்கள். அவர்கள் மட்டுமல்ல. அவர்களைப் பின்பற்றி நடந்த மேதைகள், சட்ட நிபுணர்கள், உத்தமர்கள் அனைவருமே குணத்தின் குன்றுகளாகத் திகழ்ந்தனர். பண்பின் சிகரங்களாக விளங்கினர்.

ஒரு மனிதனை உயர்த்துவது அவனுடைய பண்புதான். இன்னும் சொல்வதானால், நற்பண்புகளைப் பெற்றிருப்பது மார்க்கத்தில் மிகவும் முக்கியமான ஒன்று என்று கூறலாம். இந்த நற்குணங்களை உண்டாக்கிக் கொள்வதற்குத் தான் இறையச்சம் கொண்டவர்கள் அல்லும் பகலும் இறைவணக்கம் புரிந்தார்கள். இறையன்பு பூண்டவர்கள் மனப்பயிற்சியில் மூழ்கினார்கள். ஆம். மனப்பயிற்சியின் உதவியால் நற்குணங்களையம் உயர் பண்புகளையும் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் தங்கள் குறிக்கோளை அடைந்தார்கள்.

தீய குணம் மனிதனின் விரோதி. உயிரைக் குடிக்கும் கொடிய விஷத்திற்கு அதை ஒப்பிடலாம். தீய பண்புடையவன் அதன் கொடிய நச்சுப் பல்லுக்கு இரையாகியே தீர வேண்டும். தீய குணம் இறைவனின் அருளுக்கு அப்பாற்பட்டது. நற்பண்பு சுவனப்பாதைக்கு வாயிலாக இருப்பது போல் தீயபண்பு நரகப் பாதைக்கு வாயிலாக இருக்கிறது.

தீய குணங்களை மனோ வியாதிகள் என்று குறிப்பிடலாம். ஆனால் இது சரீர வியாதியைவிடக் கொடியது. ஏனெனில் இந்த வியாதி முற்றிப் போகும் போது நிரந்தரமான மறுமை வாழ்க்கையே பாழாகி விடுகிறது. இந்த கொடிய பிணி எங்கே? அந்தச் சாதாரண உடல் வியாதி எங்கே? இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் மிகவும் அதிகம்.

உடல் வியாதியின் விஷயம் இப்படி இல்லை. இது விசயத்தில் வைத்தியர்கள் அனைவரும் கையை விரித்து விட்டாலும் இந்த வியாதியால் ஏற்படும் மிகப் பெரிய நஷ்டம் மரணம். சடலத்தின் அழிவு! இதனால் தற்காலிகமான உலக இன்பத்தை இழக்க நேரிடுகிறது. அவ்வளவுதான்.

மனோ வியாதியின் விசயத்தில் வைத்தியர்கள் கையை விரித்து விட்டால் அதனால் இம்மை மட்டுமல்ல, மறுமையும் பாழாகிவிடுகிறது. மனோ வியாதி கொண்டவனுக்கு மறுமையில் ஏது மதிப்பு?

தன் மனோ வியாதிக்கு பரிகாரம் தேடிக் கொள்ளும் அளவிற்கு வைத்திய சாஸ்திரம் கற்றுக் கொள்ளுவது அறிவுடைய ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையாகும். ஏனெனில் எந்த உள்ளமும் முழுக்க முழுக்க வியாதியற்ற நிலையில் இருக்க முடியாது. ஒவ்வோர் உள்ளமும் ஏதாவதொரு வியாதியைத் தன்னுள் வைத்துக் கொண்டுதான் இருக்கும். அதை அசட்டை செய்யக் கூடாது. நன்கு கவனிக்க வேண்டும். இல்லையேல் மிகவும் சாதாரணமாயிருந்த அந்த மனோவியாதி நாளடைவில் வலுவேறிப் போய் வெளிப்பட ஆரம்பித்து விடும். இப்படி அது பகிரங்கமாகும்போது அதற்குரிய காரணங்களையும் அதை அகற்றுவதற்குரிய மார்க்கத்தையும் ஆராய வேண்டிய அவசியம் உண்டாகிறது. இதற்குப் பிறகு மனோ வியாதிக்குச் சிகிச்சை செய்யப்படும். இந்த சிகிச்சை குறித்துதான் வல்ல நாயன், “உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தியவர்கள் வெற்றி கண்டு விட்டார்கள்“ என்று கூறுகிறான்.

இந்த நூலில் பெரும்பாலான மனோ வியாதிகளையும் அவற்றை அகற்றுவதற்குரிய வழிவகைகளையும் விளக்கப் போகிறேன். மனோ வியாதி உண்டாவதற்குரிய காரணங்கள், மனோவியாதியின் போதுது வெளிப்படும் அடையாளங்கள் முதலியவற்றை முறையே எழுதியிருக்கிறேன். சிறு வயதிலிருந்தே நற்பண்புகளை இளம் உள்ளத்தில் பதிய வைக்கும் முறைகளையும் தன் துர்க்குணங்களைத் தானாகவே பார்த்தறியும் வகையையும் விவரித்திருக்கிறேன்.

## 2. நற்பண்பும் துர்ப் பண்பும்

“நபியே! நீர் உயர்ந்த குணங்களைப் பெற்றிருக்கிறீர்“ என்று இறைவன் அண்ணலவர்களைப் புகழ்கிறான். அவன் அவர்களுக்கு அளித்திருக்கும் அருட்கொடையை வெளியிடுகிறான்.

நபியவர்களின் நற்குணங்களை “திருமறை“ என்று அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒரு சமயம் திருநபியவர்களிடம் ஒருவர் நற்குணங்களைப் பற்றிக் கேட்டார்.

நபியவர்கள் விடையளித்தார்கள்: “மன்னிக்கும் மனப்பான்மையை உண்டாக்கிக் கொள். நன்மையானவற்றைச் செய்யத் தூண்டு. மூடர்களின் நிந்தனையைப் பொருட்படுத்தாதே… உன் தொடர்பை துண்டித்தவனுடன் இணைந்து நட. உனக்கு உதவி செய்யாதவனுக்கு நீ உதவி செய். உனக்குத் தீங்கிழைத்தவனை நீ மன்னித்து விடு. உயர்ந்த பண்புகளைப் பாரில் பரப்பவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்“

மற்றொரு சமயம் அண்ணலவர்களுக்கு எதிரில் வந்து நின்றார் ஒரு நண்பர்,

“மார்க்கம் என்றால் என்ன?“

“நற்குணம்“ என்று நபியவர்கள் பதிலிறுத்தார்கள்.

வந்தவர் திருப்தியடையவில்லை. நபியவர்களுக்கு வலப்பக்கம் வந்து நின்றார் அவர்.

“மார்க்கம், மார்க்கம் என்று எல்லோரும் சொல்லிக் கொடுக்கிறார்களே, அப்படி என்றால் என்ன“ என்றார்.

“நற்குணம்“ சட்டென்று வந்தது அதே விடை.

அந்த நண்பர் இதைப் புரிந்து கொள்ளவில்லையோ என்னவோ! முகத்தில் கேள்விக் குறியோடு இடப்பக்கம் வந்து நின்றார்.

“நபியவர்களே! மார்க்கம் என்றால் என்ன? எனக்குப் புரியும்படி கூறுங்களேன்“ என்று பணிவுடன் வினவினார்.

அண்ணலவர்கள் ஏறிட்டுப் பார்த்தார்கள். உமக்குப் புரியவில்லையா?“

கோபப்படாமல் இருப்பதுதான் மார்க்கம் என்று நீர் இன்னும் புரிந்து கொள்ளவில்லையா?“

இனிமேல் ஏன் கேள்விப் போடப் போகிறார்.? பேசாமல் அவ்விடத்தை விட்டகன்றார்.

ஒருசமயம் நபியவர்கள் உபதேசம் புரிந்தார்கள்:

“மக்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். எங்கேயும் எப்போதும் அவனுக்கு அவனுடைய ஒப்பற்ற ஆற்றலுக்கு அஞ்சுங்கள். தீமையை நீங்கள்செய்து விட்டால் உடனே நன்மையைச் செய்யுங்கள். அந்த நன்மை, தீமையை அழிக்கட்டும். மக்களிடம் பண்புடன் பழகுங்கள். நற்குணங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்…“

மற்றொரு சமயம், “உயர்ந்த காரியம் எது?“ என்று நபியவர்கள் வினவப் பட்டார்கள். அதற்கு “நற்குணம்“ என்று பதிலுறுத்தார்கள்.

நபியவர்களிடம் ஒரு பெண்மணியைப் பற்றிய புகார் செய்யப்பட்டது. “நபியவர்களே! அவள் நல்ல முறையில் வணங்குகிறாள். அதிகமாக வணங்குகிறாள். பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் இறைவணக்கம் புரிகிறாள். ஆனால் அவளது நாவு துடுக்கானது. அக்கம் பக்கத்திலுள்ளவர்களையெல்லாம் அவள் தன் நாவினால் துன்புறுத்துகிறாள்…“

“அப்படியானால் அவளுடைய நன்மைகளால் எந்த பயனுமில்லை. பிறர் மனத்தைப் புண்படுத்தும் மனப்பான்மை கொண்ட அவள் சுவன வாழ்க்கைக்கு அருகதையற்றவள்!“

அண்ணலவர்கள் பிறிதோர் இடத்தில் கூறியுள்ளார்கள்:

“இஸ்லாம் எனப்படும் இம்மார்க்ம் புனிதமானது. இதைத் தனக்கே உரித்தான அன்பு மார்க்கமாக இறைவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான். இந்த மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கும் நீங்கள் உயர்ந்த குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். தயாளத்தாலும் நற்குணத்தாலும் இம்மார்க்கத்தை அழகுப்படுத்துங்கள்“

“மக்களுக்கு உங்கள் செல்வங்களையெல்லாம் அள்ளிக் கொடுக்க வேண்டியதில்லை. அது உங்களால் முடியாது. இன்முகம் காட்டி அன்பு மொழி கூறிப் பண்புடன் பழகுங்கள். அதுபோதும்“ என்று கூறியிருக்கிறார்கள்.

மீண்டும் கூறினார்கள்:

“நீ மனிதன். உன்னை இறைவன் அழகிய தோற்றத்துடன் படைத்திருக்கிறான். உன் புற அழகைப் போன்று அக அழகையும் - குண அழகையம் உண்டாக்கிக் கொள்.“

நபியவர்கள் இறைவனிடம் இப்படி இறைஞ்சுவதுண்டு:

“இறைவனே! என்னை அழகிய உருவத்துடன் படைத்திருக்கிறாய். என் புற அழகைப் போன்று என் அக அழகையும் குணங்களையும் அழகுடையவையாக ஆக்குவாயாக! ஆரோக்கியத்தையும் நற்குணத்தையும் எனக்குத்தந்தருள்வாயாக!“

“உங்களில் நற்பண்புடையவர்களே மறுமையில் என்னோடு மிகவும் நெருங்கியிருப்பார்கள்“ என்று கூறியுள்ளார்கள்.

“அடியிற் கண்ட மூன்று விசயங்களில் ஒன்று ஒருவனிடம் இல்லையாயின் அவனுடைய காரியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. துர்ச் சயெல்களைத் தடுக்கும் இறையச்சம், முட்டாள்களை மன்னிக்கும் மனப்பான்மை, மக்களுக்கு மத்தியில் பழகுவதற்கு வேண்டிய மனப்பக்குவம்... உயர் பண்பு!“ என்று அருளியுள்ளார்கள்.

இறைவணக்கத்தின் ஆரம்பத்தில் அண்ணலவர்கள் இப்படிப் பிரார்த்திப்பார்கள்:

“இறைவனே! நற்பண்புகளுக்கும் நற்குணத்திற்கும் எனக்கு வழிகாட்டு. உன்னைத் தவிர்த்து வேறு யாராலும் எனக்கு அவற்றின் பால் வழிகாட்ட முடியாது. என் உள்ளத்தைத் தீய மனப்பாங்கிலிருந்து திருப்பிவிடு. உன்னைத் தவிர்த்து வேறு யாராலும் என் உள்ளத்தைத் திருப்ப முடியாது!“

இதுவரை திருமறையிலிருந்தும் மாநபியின் மணிமொழியிலிருந்தும் மனப்பக்குவத்தை ஆராய்ந்தோம். நற்குணத்தின் சிறப்பு என்ன, தீய குணத்தை அகற்ற மனப் பயிற்சியில் ஈடுபடுவது எத்துணை அவசியமானது என்று ஆராய்ந்தோம். இப்போது முற்காலப் பேறறிஞர்களின் கருத்துக்களை ஆராய்வோம்.

ஒரு சமயம் தலைசிறந்த ஓர் அறிஞருக்கும் அவர்க மைந்தனுக்குமிடையில் உரையாடல் நடந்தது.

“தந்தையே! மனிதனின் குணங்களில் உயர்ந்தது – பயன் மிக்கது எது?“ என்று மைந்தன் கேட்டான்.

“அன்பு மகனே! இறை மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கும் மனப்பான்மையை விட உயர்ந்தது வேறொன்றுமில்லை!“ என்று பதிலளித்தார் தந்தை.

“மார்க்கத்திற்கு அடுத்தபடியாக உயர்ந்தது எது?“

“பொருள்!“ என்றார் அறிஞர். பொருள் உலக வாழ்க்கைக்கு அவசியம். உலகிலேயேதான் மார்க்கம் மலர்கிறது.

“இதற்கும் அடுத்தபடியாக?“

“வெட்கம்! தவறான செயலில் ஈடுபடும் போது ஏற்படும் இயற்கையான வெட்கத்தையே நான் குறிப்பிடுகிறேன். இந்த வெட்கத்தின் காரணமாக தீய செயல்கள் தடுக்கப்படுகின்றன.

“இதற்கடுத்தப்படியாக?“

“நற்குணம்! இதன் உதவியால் தான் மக்களின் மத்தியில் நெருங்கிப் பழக முடியும்!“

“இதற்குப் பிறகு எது?“

“தயாளம்“

“அடுத்தபடியாக எது?“

அறிஞர் லுக்மானுல் ஹகீம் ஏறிட்டுப் பார்த்தார்.

“மகனே! இதற்குமேல் போக வேண்டாம். மேற்குறிப்பிட்ட ஐந்து நன்மைகள் ஒருவனிடம் காணப்பட்டால் அவன் மிகவும் உயர்ந்தவன். இறைவனுக்கு நெருங்கியவன். ஷைத்தானுக்கு தூரமானவன்!“

“துர்க்குணம் கொண்ட இறை பக்தன் ஒருவனுடைய நட்பைவிட நற்குணம் கொண்ட பாவியின் நட்பை நான் அதிகமாக விரும்புகிறேன்!“ என்று புலைல் கூறினார்கள்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவாக்ள் கூறினார்கள்:

“நற்குணங்களால் மக்களுடன் கலந்துறவாடுங்கள்…“

அதாவு கூறினார்கள்:

“உயர் பதவி அடைந்தவர்கள் அனைவரும் நற்குணத்தால் தான் உயர்ந்தார்கள். அண்ணல் நபியவர்களே பரிபூரண நற்குணம் பெற்றிருந்தார்கள். அத்துணை சிறப்பு வேறு யாருக்குமில்லை. நற்குணங்களை அடிப்படையாகக் கொண்டு நடப்பவர்களே இறையாண்மையைப் பெற்றவர்கள்!“

## 3. பண்புகளைப் பற்றி

அறிஞர்கள் நற்குணங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். “நற்குணம் என்றால் என்ன?“ என்று சிந்தித்தார்கள். அதன் அந்தரங்கம் குறித்து அவர்கள் எவ்வித விளக்கமும் தரவில்லை. நற்குணத்தின் பயன்களைப் பற்றித் தான் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதிலும் அவர்கள் நற்குணத்தின் பயன்கள் எல்லாவற்றையும் விவரித்து விடவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக விவரித்தார்கள். ஒவ்வொரு அறிஞரும் தமக்குப் பட்டதை தம் உள்ளத்தில் தோன்றியதைக் கூறினார்.

ஆனால் அவர்களில் யாரும் அதன் அந்தரங்கத்தை உற்று நோக்கவில்லை. அதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் உணரவில்லை. எனவே அவர்கள் நற்குணத்தின் அந்தரங்கத்தைத் தெளிவான முறையில் எழுதத் தவறி விட்டார்கள்.

அறிஞர்கள் ஒவ்வொருவரும் இது விசயத்தில் ஒவ்வோர் அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள்.

“இன்முகம் காட்டுவதும் உள்ளன்பைத் தருவதும் பிறருக்குத் தீங்கிழைக்காதிருப்பதும் தான் நற்குணங்கள்“ என்று ஹஸன் கூறுகிறார்கள்.

“மக்களிடம் அன்போடு பழக வேண்டும். அவர்களில் சாதராரணமானவனாக இருக்க வேண்டும். இதுதான் நற்குணம்“ என்று வேறு சிலர் கூறியிருக்கிறார்கள்.

எந்நிலையிலும் மக்களை இன்புறச் செய்வதே நற்குணம்“ - இது வாசிதீ அவர்களின் கருத்து.

“நற்குணம் என்றால் இறைவனின் தீர்ப்பை ஏற்று அவனுக்கு அடிபணிவதுதான்“ என்று அபூஉஸ்மான் கூறியிருக்கிறார்கள்.

“பழிக்குப்பழி என்னும் கர்வம் ஒழிய வேண்டும்.. தீங்கிழைத்தவன் மீது அன்பு செலுத்த வேண்டும். அவனுக்கா இறைவனிடம் பாவமன்னிப்புக் கோர வேண்டும். இதுதான் நற்குணம் - நற்பண்பு!“ இது இன்னொரு அறிஞரின் கருத்து.

அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

“நற்குணம் மூன்று செயல்களில் கட்டுப்பட்டிருக்கிறது. மார்க்கத்தில் தடுக்கப்பட்டதைத் தவிர்த்தல், ஹலாலான – உண்ணத் தகுதியான உணவைத் தேடியடைதல், பந்துகளுக்கு ஒத்தாசை புரிதல்.“

ஹுஸைன் பின் மன்சூர் அவர்கள் கூறினார்கள்: உண்மையை அறிந்து கொண்ட பிறகு மக்களின் உணர்ச்சியைப் பற்றிக் கவலைப் படக் கூடாது. இதுதான் நற்பண்பு!“

“இறைவனின் விசயத்தைத் தவிர்த்து வேறு எந்த விசயத்திலும் அக்கறை கொள்ளாதிருப்பதே நற்குணம் என்று கூறப்படுகிறது.

இவைபோன்று பல அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இவை ஒவ்வொன்றும் நற்குணத்தின் பயன்களையே விளக்குகின்றன. அதன் அந்தரங்கத்தையல்ல. அதோடு இவற்றில் முழுப் பயனையும் விளக்கிவிடவில்லை என்பது வெளிப்படை. னவே அபிப்பிராயங்களை எழுதுவதைவிட இதன் திரையை அகற்றி உண்மையைத் தெளிவுபடுத்திவிடுவது நல்லது என்று எண்ணுகிறேன்.

குணம் என்றால் என்ன?

இதை முதலில் ஆராய்வோம். குணம் என்பது ஒருவித மனப்பாங்கு. உறுதியான மனப்பக்குவம். இந்த மனோநிலைதான் செயல்களை உற்பத்தி செய்கிறது. இந்த மனோநிலை அறிவுக்கும் மார்க்கத்திற்கும் நேர்மையான செயல்களை உற்பத்தி செய்யும்போது அதற்கு “நற்குணம்“ என்று பெயரிடுகிறோம். பகுத்தறிவுக்கும் மார்க்கத்துக்கும் முரண்பட்ட செயல்களை அது வெளிக்கொணரும்போது அதற்கு “துர்க்குணம்“ என்னும் பட்டம் கிடைக்கிறது.

இத்தகைய மனப்பக்குமற்றவர்கள். என்னதான் நற்காரியங்கள் செய்தாலும் அவர்களுக்கு “நற்குணவான்“ என்ற பெயர் கிடைக்காது. அவசியத்திற்கென்று ஒருவன் பொருளைச் செலவிடலாம். இதனால் அவனைத் “தயாளன்“ என்று அழைக்க முடியாது. ஏனெனில் இந்த இடத்தில் செயலை உற்பத்தி செய்தது காரியம். அந்தக் காரியத்திற்காகவே அவன் செலவிட்டான். இவனிடம் செயலை உற்பத்தி செய்யும் மனப்பாங்கு கிடையாது.

இந்தத நான்கு பொருள்கள் வெளிப்படுகின்றன.

1. நற்செயல் - துர் செயல்
2. இவற்றைச் செய்வதற்குரிய ஆற்றல்
3. இவற்றைப் பற்றிய அறிவு
4. இவற்றை வெளிப்படுத்தும் மனப்பாங்கு

இந்த நான்கையும் முறையே ஆராய்வோம். நற்குணத்தை, செயலைப் பார்த்துத் தீர்மானித்து விட முடியாது. எத்தனையோ குணவான்கள் தங்கள் குணத்தைச் செயலில் காட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒன்று வறுமை காரணமாயிருக்கலாம் அல்லது பொருளைச் செலவிட முடியாதபடி தடைகள் ஏற்பட்டிருக்கலாம். இது இப்படி இருக்க, கஞ்சர்களில் சிலர் வாரி வாரிச் செலவிடுவதை நீ பார்த்திருக்கலாம். இதற்கு அவர்களிடம் சரியான காரணம் இருக்கும். சுய நலத்தைக் கருதியோ பிரபலத்தை நாடியோ பிறர் தயவை விரும்பியோ அவர்கள் இப்படிச் செய்யலாம். எனவே நற்குணத்தையும் துர்க்குணத்தையும் ஒரு மனிதனின் செயலைக் கொண்டு தீர்மானித்து விட முடியாது.

அடுத்தபடியாக நற்செயலையும் துர்ச் செயலையும் வெளிக்கொணருதல் ஆற்றல், சக்தி. இத்தகைய சக்தியிலும் நற்குணம் அல்லது துர்க்குணம் கட்டுப்படாது. ஏனெனில் செலவு செய்யும் ஆற்றலும் செலவு செய்யாது தடுத்து கொள்ளும் ஆற்றலும் உண்மையில் ஒன்றுதான். ஒவ்வொரு மனிதனிடமும் இந்த ஆற்றல் உண்டு. கொடுப்பதற்கும் தடுப்பதற்கும் சக்தியுள்ளவனாகவே ஒவ்வொரு மனிதனும் படைக்கப்பட்டிருக்கிறான். எனவே இந்தச் சக்தியை வைத்து எதையும் தீர்மானித்து விட முடியாது. இந்த ஆற்றலின் அடிப்படையில் யாரையும் “நற்குணவான்“ என்றோ “துர்க்குணவான்“ என்றோ தீர்ப்புக் கூறிவிட முடியாது.

அடுத்தபடியாக நம் சிந்தனைக்குரியது நற்செயலையும் துர்செயலையும் பற்றிய அறிவு. ஒரு செயலை செய்வதற்கு அறிவுதான் முக்கியம். நற்செயல் துர்செயல் ஆகிய இரண்டிலும் அறிவுக்கு சம்பந்தமுண்டு. இந்த அறிவை மட்டும் நற்குணம் என்று கூறிவிட முடியாது. துர்க்குணம் என்ற பெயரும் பொருந்தாது.

அடுத்தது மனோநிலை. இதற்குதான் குணம் என்னும் பெயர் உண்டு. இக்குணம் பூரணத் தன்மையடைய வேண்டுமாயின் மேற்குறிப்பிட்ட மூன்றும் பூரணத்துவம் பெற வேண்டும். மூக்குஇ வாய்இ கன்னம் ஆகியவை அழகற்றிருக்கும்போது கண்கள் அழகுடையவையாயிருப்பதால் ஒரு மனிதனை அழகன் என்று குறிப்பிட முடியுமா? முடியாது. இவை நான்குமே அழகோடு காணப்பட வேண்டும். அப்போதுதான் அவற்றைப் பெற்றிருப்பவனுக்கு “அழகன்“ என்ற பெயர் கிடைக்கும். புற அழகைப் பற்றிய விசயம் இது. இதேபோன்று அக அழகின் விசயத்திலும் மேற்குறிப்பிட்ட நான்கு தன்மைகளும் பூரணத்துவம் பெற்றிருக்க வேண்டும். இவை நான்கும் ஒழுங்காக அமைந்து விட்டால் நற்குணம் உண்டாகி விடும். இத்தகைய தன்மைகளுடைய மனிதனை “குணவான்“ என்று துணிந்து கூறலாம்.

புற அழகுக்கு இருப்பது போல அக அழகுக்கும் நான்கு அங்கங்கள் உள்ளன. அவற்றை நடுநிலைமையில் அமைக்க வேண்டும். இதன் பிறகே குணம் மணம் வீசும்.

1. அறிவாற்றல்
2. சின உணர்ச்சி
3. காம உணர்ச்சி
4. இவற்றை நடுநிலைப்படுத்தும் ஆற்றல்

இவை ஒவ்வொன்றையும் முறையே ஆராய்வோம்..

**அறிவாற்றல்:** இவற்றை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். உண்மையையும் பொய்யையும் இதன் உதவியால் பிரித்தறிய வேண்டும். நேர்மையையும் நீதியையும் உய்த்துணர வேண்டும். நல்ல கொள்கை எதுஇ கெட்ட கொள்கை எது, நற்செயல் எது, துர்ச் செயல் எது என்று பகுத்தறிய வேண்டும்.

இந்த ஆற்றல் பக்குவப்படும்போது பேரறிவு உற்பத்தியாகிறது. இத்தகைய அறிவு நற்பண்பின் ஆணிவேர். “அறிவு அளிக்கப்பட்டவர்கள் அதிகமான நன்மை அளிக்கப்பட்டு விட்டார்கள்“ என்று இறைவன் குறிப்பிடுவது இந்தப் பேரறிவைத் தான்.

**சின உணர்ச்சி:** சின உணர்ச்சி ஓரளவுக்கு அவசியம்தான். கோபமே அற்றுப் போய் மரக்கட்டையாகி விடக் கூடாது. கோபத்தால் மதியிழப்பதும் கூடாது. அறிவாற்றலுக்குத் தகுந்தபடி அது இயங்க வேண்டும். அப்போதுதான் சின உணர்ச்சிக்குப் பெருமையும் அழகும் உண்டாக முடியும்.

**காம உணர்ச்சி:** சின உணர்ச்சியைப் போன்றது தான் காம உணர்ச்சியும். பகுத்தறிவுக்கும் மார்க்கத்துக்கும் கட்டுப்பட்டு அது இயங்க வேண்டும். அப்போது தான் காம உணர்ச்சிக்குப் பெருமையும் அழகும் உண்டாக முடியும்.

**நடுநிலைப்படுத்தும் ஆற்றல்:** இது பிரதானமான ஒன்று. சின உணர்ச்சியையும் காம உணர்ச்சியையும் பகுத்தறிவுக்குஇ மார்க்கத்துக்கு அடிபணியச் செய்வது இந்த ஆற்றல்.

பகுத்தறிவை நேர்வழி காட்டும் பிரசங்கிக்கு ஒப்பிடலாம்.

அதைச் செயல்படுத்துவதுதான் இந்த நிலைப்படுத்தும் ஆற்றல். அறிவின் சைக்கினையைப் புரிந்து செயலாற்றுவது இந்த ஆற்றலைப் பொறுத்த விசயம். இது விசயத்தில் ஒரு கருவியைப் போன்று சின உணர்ச்சி பயன்படுகிறது. சின உணர்ச்சியை வேட்டை நாய்க்கு ஒப்பிடலாம். முதலில் வேட்டைக்கென்று அதைப் பக்குவப்படுத்த வேண்டும். அதன்பிறகு அது சைக்கினைக்கு அடிபணிய ஆரம்பித்து விடும். அதன்பிறகு அதனிடம் சுய விருப்பு வெறுப்பைக் காண முடியாது. இதேபோன்று முதலில் சின உணர்ச்சியைப் பக்குவப்படுத்த வேண்டும். பின்னர் அது அறிவின் சைக்கினைக்கு – மார்க்கத்தின் கையசைப்புப்படி இயங்க ஆரம்பித்து விடும். இத்தகைய தன்மையுடையது தான் காம உணர்ச்சியும்.

மேற்குறிப்பிட்ட நான்கு தன்மைகளும் ஒருவனிடம் செவ்வையாக அமைந்திருந்தால் அவனை “நற்குணவான்“ என்று தயக்கமின்றி கூறலாம். இப்படி எல்லோரிடமும் எதிர்பார்க்க முடியாது.

கோப உணர்ச்சி நடுநிலையில் அறிவுக்குக் கட்டுப்பட்டு இயங்கும்போது அதற்கு “வீரம்“ என்ற பெயர் உண்டாகிறது. காம உணர்ச்சி நடுநிலையில் இயங்கும்போது “களங்கமின்மை“ என்னும் பெயர் ஏற்படுகிறது.

சின உணர்ச்சி நடுநிலையிலிருந்து மேல் நோக்கிச் சாயும்போது “வெறி“ உண்டாகிறது. காம உணர்ச்சி மேல் நோக்கிப் போகும்போது “காமவெறி“ உதயமாகிறது.

சின உணர்ச்சி கீழ்நோக்கி சாயும்போது “கோழைத்தனம்“ தலை தூக்குகிறது. காம உணர்ச்சி கீழே இறங்கும்போது “ஆண்மையின்மை“ ஏற்படுகிறது.

இந்த இரண்டு நிலைகளும் விரும்பத்தக்கவைகளல்ல. உணர்ச்சி வரம்பு மீறி வலுவேறக் கூடாது. வலுவோ இல்லாமலும் இருக்கவும் கூடாது. நடுநிலைதான் விரும்பப் படுகிறது. புகழுக்குரியது.

அறிவாற்றலுக்கும் இந்த விதியுண்டு. அறிவு நடுநிலையில் செயல்படும்போது பல்வேறு நன்மைகள் உற்பத்தியாகின்றன. நேர்மையான சிந்தனை, கூர்மையான ஆராய்ச்சி, தெளிந்த கருத்து, தீர்மானமான கண்ணோட்டம் எல்லாம் அதன் விளைவுகளே. அறிவாற்றல் எல்லையை மீறும்போது, சூழ்ச்சி, தந்திரம், வஞ்சகம், மோசடி, குறுக்குவழி முதலியவை உற்பத்தியாகின்றன. அறிவாற்றல் குறையும்போது முட்டாள்தனம், மந்த புத்தி, மடமை முதலியவை தோன்றுகின்றன. அனுபவமின்மையும் பைத்தியமும் கூட இதன் விளைவுகளே!

சின உணர்ச்சி நடுநிலையில் இயங்கும்போது “வீரம்“ உண்டாகிறது என்று குறிப்பிட்டேன். வீரத்திலிருந்து சகிப்புத் தன்மை, தயாள மனப்பான்மை, மனோபலம், சினத்தை அடக்கியாண்டு வெற்றி கொள்ளுதல், கம்பீரம் முதலியவை உதயமாகின்றன. அன்பும் நட்பும் கூட இதன் விளைவுகளே! இவை அனைத்தும் புகழுக்குரிய நற்குணங்களே, உயர் பண்புகளே!

ஆனால் இந்த உணர்ச்சி வலுவேறிப் போகும்போது வெறுக்கத்தக்க பல தன்மைகள் உற்பத்தியாகின்றன. தற்பெருமை, பொருட்படுத்தாமை, அலட்சிய மனப்பான்மை, உயர்வெண்ணம் முதலியன முளைக்கின்றன. இந்த உணர்ச்சி வலுவிழப்பதும் விரும்பத்தக்கதல்ல. அப்போது கேவல மனப்பான்மை, இழிவெண்ணம், தன்னைத் தானே தாழ்வாக மதிக்கும் குணம் இப்படிப் பல தன்மைகள் தலை தூக்குகின்றன.

காம உணர்ச்சி நடுநிலையில் இயங்கும்போது வரவேற்கத் தக்க பல நல்லம்சங்களள் தோன்றுகின்றன. தயாளம், வெட்கம், பெருந்தன்மை, சகிப்புத் தன்மை, அடக்கம், பேணுதல் முதலியவை அதன் விளைவுகள். காம உணர்ச்சி எல்லையை மீறும்போது பேராசை, வெறி, தயாளமின்மை, பொறாமை, எதிரியின் இன்னல் கண்டு சிரித்தல், செல்வந்தர்களை இழிவாக கருதுதல், அறிஞர்களைத் தாழ்வாக எண்ணுதல் முதலியவை வெளிப்படுகின்றன. இந்த உணர்ச்சி வலுவிழக்கும் போது நல்லம்சம் எதுவும் ஏற்பட்டு விடாது. வெறுக்கத்தக்க பல குணங்களே உண்டாக முடியும்.

மேற்குறிப்பிட்ட நான்கு அம்சங்கள்தாம் நற்குணத்தின் ஆணிவேர். மற்றவை அனைத்தும் இதன் பிரிவுகளே!

இந்த நான்கு விசயங்களிலும் பரிபூரண வெற்றியடைந்தவர்கள் அண்ணலவர்களைத் தவிர்த்து வேறு யாருமில்லை. அவர்களுக்குப் பின்னர் வந்தவர்கள் பல் தரப்படுகிறார்கள். சிலர் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படுகிறாாக்ள். இக்குணங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவர்களை மக்களிலேயே மாணிக்கம் - வானவர் என்று கருதலாம். அவர்களை மக்கள் விரும்புவார்கள். அவர்ளைப் பின்பற்றி நடப்பார்கள்.

இத்தகைய குணமற்றவர்களை வருணிக்க எதிர்பதங்கள் இருக்கவே செய்கின்றன. மக்களை விட்டு, நாட்டை விட்டு, அவர்கள் வெளியேறிவிடுவது தான் நல்லது. ஏனெனில், இவர்கள் ஷைத்தானை அணுகிவிட்டார்கள். ஷைத்தான் விரட்டப்பட வேண்டியவனல்லவா?

மேற்குறிப்பிட்ட நற்குணங்களைத் திருமறை பல இடங்களில் விவரித்திருக்கிறது. விசுவாசிகளைப் பாராட்டி இருக்கிறது.

## 4.மாற்ற முடியுமா?

மக்களின் மத்தியில் மடமையில் மூழ்கியவர்கள் சிலர் இருக்கிறார்கள். மனப்பயிற்சி புரிவது, உள்ளுணர்ச்சியோடு போராடுவது, உள்ளத்தைப் பரிசுத்தமாக்க முனைவது, குணங்களை சீர்படுத்துவது - இவை அனைத்தும் அவர்கள் விசயத்தில் நடக்க முடியாதவை. தங்களால் செயலாற்ற முடியாததால் பிறராலும் செயலாற்ற முடியாதென்று கருதுகிறார்கள் இவர்கள். "குணம் என்பது இயற்கைத் தன்மை. அதை மாற்றியமைக்க முடியாது. அப்படிக் கற்பனை கூடச் செய்ய முடியாது. ஏனெனில் இயற்கையை பயிற்சியால் வெல்ல முடியாது" என்று வாதிக்கிறார்கள்.

அப்படி அவர்கள் வாதிப்பதற்கு இரண்டு ஆதாரங்கள் வைத்திருக்கிறார்கள்.

1. குணம் என்பது அகத் தோற்றத்தை – அக அழகை குறிக்கிறது. புற அழகு – புறத் தோற்றம் எப்படியோ, அப்படியே அமைந்திருக்கிறது அகத் தோற்றம். ஒரு மனிதனின் தோற்றத்தை எப்படி மாற்ற முடியாதோ அப்படியே அவன் குணத்தையும் மாற்ற முடியாது. குட்டையான ஒஒருவன் நெட்டையாக மாற முடியுமா? குரூபியானவன் அழகனாவது எப்படி? அவனுடைய அமைப்பிலே இருக்க வேண்டியதுதான். இதேபோன்று ஒவ்வொரு மனிதனும் இயற்கையான தன் குணத்துடனேயே இருக்க வேண்டியதுதான். குணத்தை சீர்திருத்த எடுத்துக் கொள்ளும் பிரயாசை வீணானது.

2. அவர்கள் தங்களுக்கு சாதகமாக வாதிக்கிறார்கள். "நற்குணம் என்றால் காமத்தையும் கோபத்தையும் வேரோடு களைந்தெறிய வேண்டும். ஆனால் இப்படிக் களைந்தெறிவது நடக்கக் கூடியதல்ல. நீண்ட நாள் பயிற்சிக்குப் பிறகு இதை நாங்கள் உணர்கிறோம். மனிதனின் இயற்கையை விட்டு காமத்தையும், கோபத்தையும் அகற்ற முடியாது என்று அறிந்து கொண்டோம். இது விசயத்தில் பயிற்சியில் இறங்குவது நேரத்தைப் பயனின்றிப் பாழ்படுத்துவதாகும். எனவே மனப் பயிற்சி என்பது வீண் முயற்சி. நடக்காத ஒன்று!"

இப்படி அவர்கள் ஆதாரம் தருகிறார்கள். இந்த ஆதாரத்தையே நாம் முதலில் ஆராய்வோம்.

குணத்தைத் திருத்த முடியாது என்பது இவர்கள் வாதம். இது உண்மையானால், முன்னோர்கள் மரணப் படுக்கையில் செய்த அறிவுரைகளும் உபதேசங்களும் பயனற்றவைகளாகின்றன. இது இப்படியிருக்க, "உங்கள் குணங்களை அழகுப்படுத்துங்கள்" என்று திருநபியவர்க் கூறியிருப்பதன் அர்த்தமென்ன? குணம் மாற்ற முடியாத, திருத்த முடியாத ஒரு தன்மையாயிருந்தால் நபியவர்கள் இவ்வாறு கூறியிருக்க வேண்டியதில்லையே!

மிருகங்களின் குணங்களைப் பக்குவப்படுத்துவதையும் அவற்றின் மிருகத் தன்மையின் இடத்தில் மனிதத் தன்மையை நிலைபெறச் செய்வதையும் நம்மால் மறுக்க முடியாது. இவற்றையெல்லாம் நாம் கண்கூடாகக் காண்கிறோம். தெருவில் அலைந்து திரிந்து கண்டதையெல்லாம் உட்கொள்ளும் நாய் மனிதனின் உணவை உட்கொள்கிறது. தன் இயற்கைக்கு முற்றிலும் மாறுபட்டதைத் தன் இயற்கையாக்கிக் கொள்கிறது. காட்டுக் குதிரையைப் பழக்கி மனிதனுக்கு ஒத்தாசையாக அமைத்துக் கொள்வது சாத்தியமே. இம்மிருகங்கள் குணம் மாறும் போது மனிதனின் விசயத்தில் மட்டும் ஏன் விதிவிலக்கு? கேவலம் மிருகத்துக்குள்ள சலுகை மனிதனுக்கு அளிக்கப்படவில்லையா?

இதில் சிக்கல் இருக்கலாம். இதோ சிக்கலை அகற்றிக் கருத்தைத் தெளிவு படுத்துகிறோம்.

சினத்தையும், காமத்தையும் வேரோடு களைந்தெறிய முடியாது. அவற்றை முற்றிலும் அடக்கியாண்டு விட முடியாது. இது மனிதனின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விசயம். ஆனால் பயிற்சியால் அவற்றின் போக்கைத் திருத்தியமைக்க முடியும். இவ்வாறு நாம் பணிக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஈடேற்றத்திற்கும் நாம் வல்லவனை அடைவதற்கும் இதுதான் வழி.

எனினும் மனிதனின் தன்மைகள் பலதரப்பட்டிருக்கின்றன. சிலரது தன்மை உடனுக்குடனேயே சீர்படும்படி அமைக்கப்பட்டிருக்கும். வேறு சிலரது தன்மை விரைவில் சீர்படாது.

இப்படி மனிதனுக்கு மனிதன் வித்தியாசப்படுவதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்.

1. மனிதனின் வாழ்க்கை எங்கும் நிலைத்து நிற்கும் இயற்கை. சினம், பெருமை, ஆசை முதலிய உணர்ச்சிகள் அனைத்தும் ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படுகின்றன. எனினும், இவற்றில் மிகவும் வலுவானது, தீவிரமானது ஆசைதான். ஏனெனில் ஆசை என்பது மற்ற எல்லாவற்றிற்கும் முன்னரே படைக்கப்பட்டு விட்டது. குழந்தையைப் பார். முதன்முதலில் குழந்தையின் உள்ளத்தில் இடம் பெறுவது ஆசை. அது வளர்ந்து ஏழு வயதைக் கடக்கும்போது சின உணர்ச்சி முளைக்கிறது. இதன் பிறகுதான் கருத்துத் தெரியும் பிராயம் ஆரம்பமாகிறது.

மனிதனின் குணங்கள், தன்மைகள் அவன் செய்து வந்த செயல்களால் மாறுபடுவதுண்டு. ஒருவன் நற்செயலைச் செய்துவரும் போது அவன் குணமும் நன்மைக்குத் தக்கபடி மாறுவதுண்டு. என்றாலும் மானிடர்களை நான்கு பிரிவினர்களாகப் பிரிக்கலாம். துர்க்குணம் கொண்டவர்கள் அனைவரையும் இந்த நான்கு பிரிவுகளில் கட்டுப்படுத்தி விடலாம்.

**முதற் பிரிவினர்:** இவர்கள் சாதாரணமானவர்கள். உண்மையையும் பொய்யையும் பிரித்தறியும் ஆற்றல் இவர்களிடம் கிடையாது. நல்லதையும், கெட்டதையும் இவர்களுக்குப் பகுத்தறியத் தெரியாது. இயற்கையான சுபாவத்தோடு இவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் உள்ளத்தில் எத்தகைய நிர்ணயமும் இருக்காது. இவர்களின் காம உணர்ச்சியும் வலுவேறிப் போயிருக்காது. காமலீலைகளிலும் அதிகமாக ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இத்தகையவர்களை விரைவில் திருத்தி விடலாம். இதற்கென்று தீவிரமான முயற்சி எதுவும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. உண்மையைக் காட்டும் நல்லறிஞர் ஒருவர்மட்டுமே தேவை. அவரது உதவியால் இவர்களைப் பயிற்சியில் ஈடுபடுத்திப் பண்படையச் செய்யலாம். குறுகிய காலத்திலேயே இவர்கள் “குணவான்க“ளாக மாறிவிடுவார்கள்.

**இரண்டாம் பிரிவினர்**: இவர்கள் முதல் பிரிவினருக்குச் சற்று மாற்றமானவர்கள். இவர்கள் தீமையையும் அதன் நச்சுத் தன்மையையும் அறிந்திருப்பார்கள். நன்மையைப் பற்றியும் இவர்களுக்குத் தெரியும். ஆனால் நன்மையைச் செய்யும் பழக்கம் மட்டும் இவர்களிடம் இருக்காது. இவர்களுடைய கண்களுக்குத் தீமைகள் அழகுடன் தோற்றமளிக்கும். எனவே இவர்கள் தீமையை விழுந்து விழுந்து செய்வார்கள். காமத்தின் கட்டளையை இவர்கள் குறைவின்றிச் செய்து முடிப்பார்கள். நேர்மையான கருத்துக்களைப் புறக்கணித்து விடுவார்கள். ஏனெனில் இவர்கள் காம மன்னனின் அடிமைகள்! அதே சமயம் இவர்கள் தங்கள் குறையையும் உணர்வார்கள்.

இத்தகையவர்களுக்குப் பரிகாரம் செய்வது முதலாமவர்களை விடக் கடினமானதாகும். ஏனெனில் இவர்கள் தீமையைச் செய்து செய்து பழக்கப்பட்டு விட்டார்கள். இவர்களைத் திருத்த வேண்டுமாயின் முதலில் இவர்களின் உள்ளத்தில் ஊறிப் போய் இருக்கும் தன்மைகளைக் களையவேண்டும். அடுத்தபடியாக அவர்களின் உள்ளத்தில் நற்காரியத்திற்குரிய வழக்கத்தை உண்டாக்க வேண்டும். இத்தகையவர்கள் உறுதி பூண்டு பயிற்சி புரிந்தால் வெற்றி காணலாம்.

**மூன்றாம் பிரிவினர்**: இவர்கள் சற்று விசித்திரமானவர்கள். தீய குணங்கள் யாவற்றையும் இவர்கள் அவசியமான தன்மைகள் போன்று கருதுவார்கள். மழகுடையவை – நேர்மையானவை என்று எண்ணுவார்கள். அதன்படிச் செயலாற்றுவார்கள். இத்தகையவர்களுக்குப் பரிகாரம் செய்வது மிகவும் கடினம். இதில் வெற்றி காண்பது மிகவும் அரிது. அபூர்வம். ஏனெனில இவர்கள் விசயத்தில் தீய தன்மைகள் வலுவேறிப் போய்விட்டன.

**நான்காம் பிரிவினர்:** இவர்கள் தவறான வழியில் பிரவேசிப்பதை மிகவும் விரும்புவார்கள். அதன்படி நடப்பார்கள். உள்ளத்தைப் பாழ்படுத்துவதிலும் தீமையைச் செய்வதிலும் ஏதோ பெருமை – உயர்வு இருப்பதாக கருதுவார்கள். இவைகள்ப தங்கள் மதிப்பை உயர்த்திவிடுவதாகவும் இவர்கள் எண்ணுவார்கள். இவர்கள் விசயத்தில் பயிற்சியால் எந்தப் பயனும் விளைவதிற்கில்லை. இவர்களைத் திருத்த முடியாது. “ஆண்மையற்றவன் வயோதிகத்திற்குரிய பயிற்சியில் ஈடுபட வேண்டியதுதான்“ என்று இது விசயத்தில் கூறலாம்.

“பயிற்சியால் பலனில்லை“ என்று வாதிப்பவர்களின் முதல் ஆதாரத்திற்கு விடையளித்தாகிவிட்டது. இப்போது இரண்டாவது ஆதாரத்தைப் பார்ப்போம்.

“சினம், காமம் முதலிய உணர்ச்சிகளை மனிதனிடமிருந்து அகற்ற முடியாது“ என்று அவர்கள் வாதிக்கிறார்கள். இதுமுற்றிலும் தவறு. பயிற்சியின் பயன் காமத்தையும் சினத்தையும் கட்டோடு அழிப்பதுதான் என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

காமம் என்பது வீணான ஒன்றல்ல. பயனைக் கருதியே காம உணர்ச்சி படைக்கப்பட்டிருக்கிறது. ஆசையும் இப்படித்தான். அதுவும் வாழ்க்கைக்கு அத்தியவாசியமான பயனைக் கருதியே உண்டாக்கப்பட்டிருக்கிறது. உணவின் மீது ஆசை இல்லாவிடில் யாரும் உணவை உட்கொள்ளப் போவதில்லை. புணர்ச்சியை விரும்பாவிடில் ஒரு மனிதனால் எப்படிப் போகம் செய்ய முடியும்? இதனால் சந்ததித் தொடர்பு அறுபடுகிறது. ஒரு மனிதனுக்கு கோப உணர்ச்சியே இல்லாமற் போய்விட்டால், அவனால் தனக்கு வரும் அபாயத்தை – தீங்கைத் தடுக்க கொள்ள முடியுமா?

ஆசை இருக்கும் போதெல்லாம் பொருளாசையும் இயற்கையாகவே உண்டாகிவிடுகிறது. இந்த ஆசை நாளடைவில் “சேமிப்பு“ என்று மாறுகிறது. பொருளை இப்படித் தேங்கச் செய்வது குறிக்கோளல்ல. பொருளை வாரி இறைப்பதும் கூடாது. நடுநிலையில் அதைச் செலவிட்டு பயனடையவேண்டும். இதுபோன்று சினத்தால் மதியிழக்காமல் அதை நடுநிலையில் இயங்கச் செய்ய வேண்டும். அப்போது கோழைத் தனத்துக்கோ வெறியுணர்ச்சிக்கோ இடமிருக்காது. ஆக, ஒரு மனிதனின் உணர்ச்சி அதற்கு வேண்டிய வலுவோடிருக்க வேண்டும். அதே சமயத்தில் அது அறிவின் அறைகூவலுக்கு அடிபணிய வேண்டும். “அவர்கள் காபிர்களின் விசயத்தில் கடின சுபாவமுடையவர்களாயிருந்தார்கள்…“ என்று இறைவன் கூறுகிறான். “கடினம்“ என்பது சினத்தால் ஏற்படும் விளைவு. இந்த விளைவை இறைவன் புகழ்ந்துரைக்கிறான்.

சினத்தை அடியோடு களையவும் முடியாது. அதற்குத் தேவையுமில்லை. சின உணர்ச்சியை அடியோடு அழிக்கும் போது மார்க்கப் போர் - புனிதப் போர் எதுவும் நடைபெற முடியாது. இப்படியிருக்க சினத்தையும் காமத்தையும் கட்டோடு அழிப்பதை எவ்வாறு குறிக்கோளாய்க் கொள்ள முடியும்? சாதாரண மனிதர்கள் ஒரு புறமிருக்க தீர்க்கதரிசிகளும் கூட இது விசயத்தில் கட்டுப்பட்டவர்களே. அவர்களுக்கும் சினம் - காமம் எல்லாம் உண்டு. "நான் மனிதன் தான். எனவே மற்றவர்களைப் போல் நானும் சினமுறுகிறேன்" என்று திருநபியவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் விரும்பாத ஒன்றைப் பற்றி அவர்களுக்கெதிரில் பேசப்படும் போது அவர்களின் வதனம் சிவந்துவிடுமாம்! ஆனால் அவர்கள் திருநபி தீர்க்கதரிசி உண்மையைத் தவிர்த்து – நியாயத்தை விடுத்து வேறு எதையும் கூறமாட்டார்கள். சினத்தினால் அவர்கள் மதியிழக்க மாட்டார்கள்.

நபித் தோழர்களை இறைவன் "சினத்தை மென்று விழுங்கக் கூடியவர்கள்" என்று பாராட்டுகிறானேயொழிய "சினமற்றவர்கள்" என்று குறிப்பிடவில்லை.

எனவே சினத்தையும் காமத்தையும் நடுநிலையில் கொண்டு வருவதே நம் குறிக்கோள். அவற்றை கட்டோடு அழிப்பதல்ல. பயிற்சியால் இதைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம்.

சில சமயங்களில் காம உணர்ச்சி வேகமாக இயங்கி அறிவையே ஆட்டி வைப்பதுண்டு. அப்போது அறிவுக்கு அதை அடக்கியாளும் ஆற்றல் இருக்காது. இதைப் பயிற்சியால் சீர்படுத்த முடியும். இதற்கு அனுபவ அறிவே ஆதாரம்.

செலவு செய்யும் விசயத்திலும் நடுநிலையைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் செலவு செய்யும் போது வீண் விரயமும் செய்ய மாட்டார்கள். தேவைக்குதவாதபடி குறைத்துக் கொள்ளவும் மாட்டார்கள். இவ்விரண்டிற்கும் நடுவில் நிற்பார்கள்!" என்று இறைவன் தயாளர்களைப் பாராட்டுகிறான். "உன் கையை கழுத்தோடும் இணைத்துக் கொள்ளாதே. அளவுக்கு அதிகமாகவும் நீட்டி விடாதே! என்று எச்சரிக்கிறான்.

இதேபோன்று உணவாசையின் விசயத்திலும் செயலாற்ற வேண்டும்.

"உண்ணுங்கள், பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். வீண் விரயம் செய்வோரை இறைவன் விரும்புவதில்லை!" என்று கூறுகிறது திருமறை.

"நடுநிலைமையே எல்லாவற்றிலும் சிறந்தது!" என்று அண்ணலவர்கள் அருளியுள்ளார்கள்.

இப்படி எதற்காக நடுநிலைமை வேண்டப்படுகிறது. இதில் ஒரு மர்மம் - தத்துவம் உண்டு. இவையாவும் உள்ளத்தைப் பொறுத்த விசயங்கள். உள்ளம் பரிசுத்தத் தன்மையடைந்தால் தான் மறுமையில் வெற்றியுண்டு. அது பொருளை வாரி இறைப்பதிலோ செலவிடாமல் கட்டோடு தடுத்துக் கொள்வதிலோ ஆர்வம் காட்டக் கூடாது. இவ்விரு தன்மைகளை விட்டு அது தனித்தியங்க வேண்டும். அதுதான் உள்ளத்திற்கு அழகு. காமத்தின் விசயத்திலும் சினத்தின் விசயத்திலும் அது நிதானமாய் இருக்க வேண்டும். அப்போது பொருளினால் "தயாளம்" பிறக்கும். சினத்தினால் "வீரம்" உதயமாகும். காமத்தினால் "களங்கமின்மை" உதயமாகும். இதுதான் நம் குறிக்கோள்.

ஆனால் மக்களுக்கு வழிகாட்டும் பெரியோர்கள். தனிப்பட்டவர்கள். அவர்கள் நடுநிலையைப் பிடித்துக் கொண்டு அழ வேண்டியதில்லை. கூடாது. சினத்தையே அவர்கள் கட்டோடு வெறுக்க வேண்டும். காமத்தையே அடியோடு மறக்க வேண்டும்.

செலவிடாமல் தடுக்கும் குணத்தை வெறுக்க வேண்டும். இது விசயத்தில் அவர்களுக்குச் சலுகை கிடையாது.

உணர்ச்சிகளை அழிக்க முடியாது என்றாலும் அது விசயத்தில் அவர்கள் முனைந்தால் ஓரளவு வெற்றியுண்டு. அவற்றை அடியோடு அகற்றுவதையே அவர்கள் விரும்ப வேண்டும். அது சம்பந்தமாக அவர்கள் செய்யும் பயிற்சி அவர்களை விரும்பத்தக்க நிலைக்கு கொண்டு வந்து விடும்.

இந்த மர்மத்தைப் பெரும்பாலோர் உணர்ந்து கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் மடமையின் மடியில் உறங்குகிறார்கள். "சின உணர்ச்சி முக்கியம். சினமுறுவது அவசியம். பொருளைச் சேமித்து வைப்பது அத்தியாவசியம்!" என்று அவர்கள் பிதற்றிக் கொள்கிறார்கள்.

## 5. நற்குணத்தின் வித்து!

உணர்ச்சிகளை நடுநிலையில் இயங்கச் செய்வதில் தான் நற்பண்பு பிரகாசிக்கிறது என்று அறிந்து கொண்டு விட்டாய். இத்தகைய நடுநிலை மனப்பான்மை இரண்டு காரணங்களால் உண்டாகலாம்.

1. இறைவனருளால் உண்டாகலாம். இத்தகைய பேறு பெற்றவர்கள் பிறக்கும்போது நற்பண்புடையவர்களாக பிறப்பார்கள். அவர்களின் அறிவு பூரணத்துவம் பெற்றிருக்கும். சினத்தையும் காமத்தையும் நடுநிலைப்படுத்த வேண்டிய தேவை இவர்களுக்குக் கிடையாது. இயற்கையிலேயே அவை இரண்டும் நடுநிலையில் இயங்குமாறு அமைக்கப்பட்டிருக்கும். அறிவுக்கும் மார்க்கத்துக்கும் தலை சாய்ப்பது அவற்றின் கடமை. இவர்கள் பள்ளிக்குச் செல்லாமலே கல்வி கற்றவர்கள், பயிற்சி இன்றியே பண்பட்டவர்கள். இத்தகையவர்களுக்க நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் உதாரணங்களாகக் காட்டலாம். இவர்கள் மட்டுமல்ல, மற்ற நபிமார்கள் அனைவர்களும் இத்தகையவர்களே!

பயிற்சியாலும், முயற்சியாலும் அடையக் கூடிய ஒரு தன்மை இயற்கையிலேயே அமைந்திருப்பது ஆச்சரியமான விசயமல்ல. எத்தனையோ குழந்தைகள் பிறக்கும்போதே நல்லம்சங்கள் உடையவையாகப் பிறக்கின்றன. சில வேளைகளில் இதற்கு நேர் எதிராகவும் பிறப்பதுண்டு. இத்தகைய குழந்தைகளை நல்ல காரியங்களில் ஈடுபடுத்தியிருக்கலாம். நற்குணவான்களுக்கு மத்தியில் பழக்கப்படுத்தலாம். சில சமயங்களில் இந்தக் குறிக்கோள் வெறும் போதனையாலே உண்டாகி விடும்.

2. பயிற்சியாலும் முயற்சியாலும் உண்டாகலாம். நற்பண்புக்கு எந்தக் காரியங்கள் நெருங்கியவையோ அவற்றைச் செய்ய வேண்டும். உதாரணமாக ஒருவன் தன்னிடம் "தயாளம்" உண்டாக வேண்டும் என்று விரும்புகிறான். முதலில் அவன் தயாளத்தின் செயலாகிய "செலவிடுதல்" என்னும் விசயத்தில் தன்னைப் பழக்கப்படுத்த வேண்டும். இந்தப் பயிற்சியை இடையில் விட்டுவிடாமல் தொடர்ந்து நடத்த வேண்டும். அதன்பிறகு, செலவிடும் தன்மை அவனுடைய இயற்கைத் தன்மைகளில் ஒன்றாக மாறிவிடும். பிறகு அவனை "தயாளன்" என்று கூறலாம். அவனிடம் "தயாளம்" குடியிருக்க ஆரம்பித்து விடும்.

வேறொருவன் பெருமை கொண்டலைபவனாக இருக்கலாம், தன் குணத்தை மாற்றி எளிமைக் குணத்தை உண்டாக்கிக் கொள்ள விரும்பலாம். அவனும் மேற்சொன்னபடி செயலாற்ற வேண்டியதுதான். முதலில் எளிமையை மேற்கொண்டு நடந்த உத்தமர்களைப் பல நாட்கள் பின்பற்ற வேண்டும். அவர்கள் செய்து வந்தவற்றைச்

செயல்படுத்த வேண்டும். இது விசயத்தில் தன் உள்ளத்தோடு போராட வேண்டும். அதை அடக்கியாள வேண்டும். இந்தக் கடின முயற்சிக்குப் பிறகு எளிமைக் குணம் அவனுடைய இயற்கைக் குணமாக மாறிவிடும்.

இம்முறையின் உதவியால் நற்பண்புகள் அனைத்தையும் உண்டாக்கிக் கொள்ள முடியும். இப்படிப் பயிற்சிகளின் உதவியால் வெற்றியடையும் போது நற்பண்பிற்குரிய செயல்கள் ஒவ்வொன்றும் இனிக்க ஆரம்பித்து விடும். செலவு செய்வதைத் தயாளனின் உள்ளம் விரும்பும். தணிந்து போவதை எளிமைக் குணவானின் உள்ளம் விரும்பும். ஓர் உள்ளம் பரிபூரணப் பண்பு பெற வேண்டுமாயின் அது நற்பண்புகள் அனைத்தையும் உண்டாக்கிக் கொண்டால் மட்டும் போதாது, தீய குணங்கள் அனைத்தையும் வெறுத்தொதுக்க வேண்டும். அதன்பிறகு தான் பண்பின் பூரணத் தன்மையை எதிர்பார்க்க முடியும். இப்படிச் சில நாட்கள் பின்பற்றி நடந்துவிட்டால் மட்டும் போதாது. இத்தன்மை நிரந்தரத்துவம் பெற்றிருக்க வேண்டும். எப்போதும் செயலாற்ற வேண்டும். ஒரு மனிதனுக்கு நீண்ட ஆயுள் அளிக்கப்பட்டிருந்தால், தன் பண்புகளை வலுவேற்றிக் கொள்ளும் வாய்ப்பு அவனுக்குண்டு. அவன் உயிரோடிருந்து செயலாற்ற செயலாற்ற அவன் பண்பும் உயர்ந்து கொண்டேபோகும். இதனால்தான் அண்ணலவர்கள், ஈடேற்றம் குறித்து வினவப்பட்டபோது, “நீண்ட ஆயுள், இறைவழிபாட்டில் செலவாகும் நீண்ட ஆயுள்! என்று விடையிறுத்தார்கள்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான், தீர்க்கதரிகளில் அநேகர் மரணத்தை வெறுத்தார்கள். இறையருள் பெற்ற பெரும்பாலோர் மரணணத்தைப் பார்த்து முகம் சுளித்தார்கள். ஏனெனில் உலகில்தான் மார்க்கம் மலர்கிறது. இம்மைதான் மறுமைக்கு வேண்டிய வயல்! ஆயுள் முழுவதும் இறைவணக்கமே பிரகாசிக்கும்போது அதற்குரிய பயனும் உயர்ந்ததாகவேயிருக்கும். அப்படித் தன் வாழ்க்கையை வணக்கத்திற்கென்று அர்ப்பணித்த ஒரு மனிதனின் உள்ளம் பரிசுத்தமாக இருக்கும். அவன் குணம் ஒப்பற்று விளங்கும். அவன் வதனம் பொலிவுற்றுப் பிரகாசிக்கும்.

இறைவணக்கத்தின் குறிக்கோள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதுதான். இப்படி ஏற்படும் தூய்மை வலுவேற வேண்டுமாயின் நற்காரியங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதன் கடைசி எல்லை, உலக ஆசாபாசங்களை வெறுப்பது. உலக ஆசாபாசங்களை வெறுப்பதோடு இறையன்புக்கும் இறையச்சத்துக்கும் உள்ளத்தில் பூரண இடமளிக்க வேண்டும்.

இந்த நிலையை ஒரு மனிதன் வந்தடைந்து விட்டால் “இறை சந்திப்பு“ ஒன்றைத் தவிர்த்து வேறு எதையும் அவன் அதிகமாய் விரும்பமாட்டான். தன் செல்வம் அனைத்தையும் இறைவழிபாட்டிலேயே இறைவனுக்காக செலவிடுவான். காம உணர்ச்சியும் கோப உணர்ச்சியும் அவனுக்குக் கட்டுப்பட்ப உணர்ச்சிகளாகி விடும். இறைவனின் விருப்பத்திற்கொப்ப அவற்றை அவன் பயன்படுத்துவான். மார்க்கம் என்னும் நிலுவையில் அவற்றை எடை போட்டுச் செயலாற்றுவான். அறிவொளியில் அவற்றை ஆராய்ந்து செயல்படுத்துவான். இப்படி நடப்பதில் அவன் பேரின்பம் அனுபவிப்பான்.

இத்தகைய நிலையை ஐங்காலத் தொழுகையால் அடையலாம். எல்லாவற்றிற்கும் பழக்கம்தான் காரணம். பழக்க வழக்கங்கள் ஒரு மனிதனின் உள்ளத்தில் எத்தனை விசித்திரமான இன்பங்களை உண்டாக்கி விடுகின்றன. செல்வத்தில் மிதக்கும் அரசர்களில் அநேகர் எப்போதும் துக்கத்துடனேயே இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இதற்கு மாறாய், வறுமையில் உழலும் குடிகாரர்கள் மகிழ்ச்சிக் கடலில் இன்பமடைகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களின் குடிப்பழக்கம். போதைப்

பொருளின் உதவியால் அவர்கள் தங்கள் துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

குடிப்பழக்கத்தால் கொடிய பல தீங்குகள் விளைகின்றன. வீடு வாசலைக் கூட அது இழக்கச் செய்து விடும். “வறுமையின் தூதன்“ என்று அதைக் குறிப்பிடலாம்.

இப்படியிருந்தும் அதைச் சிலர் விரும்புகிறார்கள். ஏனெனில் அதன் மீது அவர்களுக்குள்ள மோகம் பல நாட்களாய் நீடித்திருக்கிறது. ஆகவே அவர்களால் அதை வெறுக்க முடியவில்லை.

இது ஒருசாராரின் குணம். இவர்கள் தங்கள் அன்பிற்குரிய பொருளாகப் போதைப் பொருளை எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

மற்றொரு பிரிவினர் இருக்கிறார்கள். இவர்கள் புறாவைப் பறக்க விட்டு விளையாடுவார்கள். இதுவும் ஒரு பழக்கம்தான். இதில் ஈடுபட்ட ஒருவன் பகல் முழுவதும் பதை பதைக்கும் வெளியில் நிற்பது ஆச்சரியமல்ல. இதன் சிரமம் அவனுக்குத் தெரியாது. காரணம் அவன் தன் பறவையைப் பற்றிய இன்பத்தில் லயித்திருக்கிறான். அந்த இன்பத்தின் நிழலில் வெளிலின் கடுமை மறைந்து விடுகிறது. தன் பறவை வேகமாய் பறப்பதையும் இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொள்வதையும் அவன் ஊன்றிக் கவனிப்பான். அது பரந்து விரிந்த ஆகாயத்திலே காற்றைக் கிழித்துக் கொண்டு செல்வதிலே அவன் கவனம் இருக்குமே தவிர, வெயிலைப் பற்றியும் அதன் கடுமையைப் பற்றியும் அவன் கவலைப்பட மாட்டான். இது கூட பழக்கத்தால் ஏற்பட்டதுதான்.

கொடிய குற்றம் புரிந்து தண்டனையடைந்த குற்றவாளிகளைப் பார். தாங்கள் வாங்கிய அடிகளையும் தண்டனைகளையும் அப்போது அவர்கள் சகித்துக் கொண்டதையும் பெருமையோடு சொல்லிக் காட்டுவார்கள். சாட்டையடிக்கு அவர்கள் தயங்காமல் நின்றதையும் கலக்கமின்றிச் சிலுவையைப் பார்த்து முன்னேறியதையும் புன்முறுவலுடன் எடுத்துரைப்பார்கள். இப்படிக் கூறுவதில் ஏதோ பெருமை இருப்பதாக இவர்கள் எண்ணுவார்கள். இவற்றையெல்லாம் “வீரப் பிரதாபங்கள்“ என்று நினைத்துக் கொள்வார்கள். அளிக்கப்பட்ட தண்டனையைப் பற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது. இப்படிப் பேசிப் பேசிப் பழக்கப்பட்டு விட்டார்கள்.

ஆனால் உண்மையில் இவர்கள் பெருமைப்பட முடியுமா? கேவலம்! அறியாமை!

இவை அனைத்தும் பழக்கவழக்கங்களால் ஏற்பட்ட வினை! நிரந்தரமாக ஒரு செயலைச் செய்து வரும்போது – அது நல்லதாயினும்இ கெட்டதாயினும் - அந்தச் செயல் நாளடைவில் இன்பம் தருவதாக மாறிவிடும். பெண்களோடு பழகிப் பழகி தங்கள் ஆண்மையைப் பணயம் வைத்தவர்களும் இத்தகையவர்களே. தங்கள் “ஆண்மை“யைப“ பற்றி இவர்கள் பெருமையடித்துக் கொள்வதும் உண்டு. அரசர்களும் அறிஞர்களும் தற்பெருமையோடிருக்கலாம். இதற்கும் பழக்கம்தான் காரணம்.

மனிதனின் மனம் விசித்திரமானது தான். அது தீயவற்றையே அதிகமாக விரும்பச் செய்கிறது. ஆனால் அந்த மனத்தில் நல்ல காரியங்களின் வித்தை விதைத்தால் பயன் கிடைக்காமற் போகாது. இயற்கையில் உள்ளம் நற்காரியங்களை விரும்புவதில்லை. மண்ணை உட்கொள்ள வெறுப்பது போல் அவற்றை வெறுக்கிறது.

உள்ளம் புனிதமானது. அதற்குரிய உணவு நல்லறிவு, ஞானம், இறையன்பு இவைதாம். இவற்றை அது இயற்கையாகவே விரும்ப வேண்டும். அப்படி விரும்பாவிடில் அதற்கு மனோ வியாதியே காரணம் என்று எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இதற்கு மனிதனின்

உடலையே உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அதன் வளர்ச்சிக்கு உணவும் நீரும் தேவை. ஆனால் இரைப்பையில் ரணம் காணும் போது இவ்விரண்டுமே - அத்தியாவசியமான, இவ்விரண்டும் – வெறுத்தொதுக்கப் படுகின்றன.

இறைவனைத் தவிர்த்து மற்ற எதையேனும் விரும்பி நேசிக்கும் ஒவ்வோர் உள்ளமும் வியாதியுடையதுதான்.

ஆக, மேற்கூறிய நற்பண்புகளைப் பயிற்சியின் உதவியால் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்று உணர்ந்து கொண்டு விட்டாய். இந்தத் தத்துவம் உள்ளத்திற்கும் அவயங்களுக்கும் இடையிலுள்ள விந்தையான ஆற்றலை – தொடர்பை விவரிக்கிறது. உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் ஒவ்வொன்றும் தன் முத்திரையை அங்கங்களில் பதிக்கின்றன. உள்ளம் அமைதியுற்றிருக்கும் போது அங்கங்களும் ஓய்வெடுத்துக் கொள்ளும். இதில் சந்தேகத்திற்கு இடமேயில்லை. செயலில் தோன்றும் ஒவ்வொன்றும் முதலில் உள்ளத்தில் உருப்பெற்றதுதான். செயலாற்றப்படும் ஒவ்வொரு நன்மையும் உள்ளத்தின் நெளிவில் பங்கு பெறுகிறது.

ஒரே ஒரு தடவை செய்யப்படும் நன்மையாலும் இத்தகைய பயனுண்டு. ஆனால் அதனால் குறிப்பிடத்தக்க எவ்வித முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. உள்ளத்தைத் திருத்தும் விசயத்தில் அதற்குப் பங்கு இருந்தாலும் அந்தப் பங்கு மிகவும் சாதாரண அளவுடையது. ஒரே ஒரு நன்மையை ஒரே ஒரு தடவை செய்து விட்டால் நற்பண்பு உண்டாகி விடும் என்று எதிர்பார்க்க முடியாது. தொடர்ந்து செய்யப்படும் நன்மைகளுக்குத் தான் உள்ளத்தின் போக்கை முழுக்க முழுக்கத் திருப்பும் ஆற்றல் உண்டு.

இதேபோன்று தான் தீமையும். ஒரே ஒரு தடவை செய்வதால் உள்ளம் இருண்டு போய்விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அது தவறு. எனினும் அனுபவப்பட்டவர்கள் தீமையை வெறுக்க முடியாது. ஒரே தடவையோடு நிறுத்திக் கொள்வது அவ்வளவு எளிதான காரியமல்ல. பாவச் செயலைச் சாதாரணமாக மதிக்கும் மனப்பான்மை சிலருக்குண்டு. இது அபாயகரமானது. இந்த மனப்பான்மை கொடிய –பெரிய பாவங்களுக்கெல்லாம் வழி காட்டி விடும். அதன்பிறகு பாவத்தளையை தகர்த்தெறிவது சாதாரண காரியமல்ல. அதன் கோரப் பிடியிலிருந்து உள்ளத்தைத கண்டிப்பாய் மீட்க முடியாது. இந்த நிலையைத் தான் " பாவ மன்னிப்பின் கதவு அடைபடும் நேரம்" என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதைப் பற்றித்தான் இறைவன் குறிப்பிடுகிறான்: "அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும் திரையை உண்டாக்கி விட்டோம். அவர்கள் எதையும் பார்க்க மாட்டார்கள்."

அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: "ஈமான் என்பது ஆரம்பத்தில் உள்ளத்திலே வெண் புள்ளியாகத் தோன்றும். ஈமானின் வளர்ச்சியைப் பொறுத்து அந்த வெண் புள்ளி வளர்ந்து கொண்டே போகும். பரிபூரண ஈமான் ஏற்பட்டால் உள்ளமே வெள்ளையாக மாறி விடும்."

இதிலிருந்து நீ அறிந்து கொண்டது என்ன? நற்குணம் என்பது இயற்கையாகவும் அமைந்திருக்கலாம். பயிற்சியாலும் உண்டாகலாம் என்று உணர்ந்து கொண்டாய்.

நன்மையைச் செய்தவர்களுக்கு நற்கூலியுண்டு. தீமைக்குக் கூலி தீமையைத் தவிர்த்து வேறெதுவுமில்லை. இறைவன் அநியாயம் செய்வதில்லை. மக்கள் தாங்களாகவே தங்கள் உள்ளங்களுக்கு அநியாயம் செய்து கொள்கிறார்கள்.

## 6. பயிற்சியின் முறை

மன வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சியை ஒப்பிடலாம். அதிகமான உஷ்ணமோ தேவைக்கதிகமான குளிர்ச்சியோ இல்லாமல் உடல்நிலை நடுநிலையிலிருப்பது தான் ஆரோக்கியம்இ இத்தகையதுதான் மனப்பக்குவமும். உணர்ச்சிகள் வரம்பு மீறிப் பாயாமலும் மரக்கட்டையைப் போல இல்லாமலும் நடுநிலையில் இருக்க வேண்டும். அது தான் உள்ளத்தின் ஆரோக்கிய நிலை. இந்த நிலை மாறினால் அது மனோவியாதியின் அறிகுற என்று எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

பொதுவாகப் பெரும்பாலோர் நடுநிலை என்னும் ஆரோக்கியத்துடனேயே காணப்படுகிறார்கள். இதேபோன்று பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றும்பரிசுத்மான உள்ளத்தோடு தான் பிறக்கிறது. எனினும் அதன் பெற்றோர் பழக்க வழக்கத்தாலோ போதனையாலோ அந்தப் பரிசுத்தத் ன்மையைப் போக்கி விடுகிறார்கள்.

மனிதனின் உடல் ஆரம்பத்திலேயே பூரணத் தன்மை பெற்றிருக்கவில்லை. நாளடைவில் அது வளர்ந்து பூரணத்துவமடைகிறது. அதற்கு உணவு உதவி புரிகிறது. அதேபோன்று மனிதனின் ஆத்மா முதலிலேயே பூரணத் தன்மையோடு படைக்கப்படவில்லை. அதில் பல குறைகள் இருந்தன. அவற்றைப் பயிற்சியாலும் நற்செயலாலும் களைந்து ஆத்மாவுக்குப் பூரணத்துவம் அளிக்க வேண்டும். அதற்கு உணவு எது? அறிவு!

ஆரோக்கியமுள்ளவன் தன் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் விசயத்தில் அக்கறைக் கொள்வான். வியாதியுள்ளவன் ஆரோக்கியத்தை உண்டாக்கிக் கொள்ளும் விசயத்தில் அக்கறைக் கொள்வான். இதேபோன்று பரிசுத்தமான உள்ளம் கொண்டவன் அதன் பரிசுத்தத் தன்மையைக் காப்பாற்ற வேண்டும். மனோ வியாதி கொண்டவன் மனோ ஆரோக்கியத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆரோக்கியத்தைக் குலைக்கும் காரணங்கள் ஒவ்வொன்றையும் அதற்கு எதிரிடையான காரணத்தைக் கொண்டுதான் அழிக்க வேண்டும். உஷ்ணம் அதிகப்பட்டு விட்டால் குளிர்ச்சியைச் செலுத்திப் பயன் காணலாம். குளிர்ச்சி மேலிட்டால் உஷ்ணத்தின் உதவியால் ஆரோக்கியத்தை அடைய முடியும். இதேபோன்று உள்ளத்தைக் கெடுக்கும் துர்க்குணங்கள் ஒவ்வொன்றையும் அதற்கு எதிரிடையான நற்குணத்தால் அழிக்க வேண்டும். அறியாமைப் பிணியை அறிவொளியால் விரட்டலாம். கஞ்சத்தனத்தைத் தயாள குணத்தால் அப்புறப்படுத்தலாம்.

உடலின் வியாதியைப் போக்குவதற்காக மருந்து குடிக்கிறோம். மருந்தின் கசப்பைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. ஆரோக்கியத்தின் இனிப்பை எண்ணி இந்தக் கசப்பை மறக்கிறோம். இதேபோன்று மனோ வியாதியுள்ளவர்கள் கடுமையான பயிற்சியில் ஈடுபட வேண்டும். அது கசப்பாகத்தானிருக்கும். வரப்போகும் பயனை எண்ணிப் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும். உடலின் வியாதிக்கு மரணம் முற்றுப் புள்ளி. மரணத்திற்குப் பின்னர் எந்த உடல் வியாதியும் வெளிப்படாது. ஆனால் மனோவியாதி பயங்கரமானது. இம்மையில் மட்டுமல்ல மரணத்திற்குப் பிறகு மறுமையிலும் அந்தப் பிணி தொடர்ந்து வரும். தொல்லை தரும். இறைவன் காப்பாற்றுவானாக!

குளிர்ச்சியால் ஏற்பட்ட வியாதியை அழிக்க உஷ்ணம் முக்கியம். என்றாலும் கடினமான குளிரால் ஏற்பட்ட வியாதியைச் சாதாரண உஷ்ணத்தால் அகற்ற முடியாது. அந்த உஷ்ணம் போதிய அளவு வலுப்பெற்றிருக்க வேண்டும். இதேபோன்று தீய காரியங்களால் ஏற்பட்ட வியாதியை நற்காரியங்கள் செய்வதால் அழிக்க முடியும்.

என்றாலும் கொடிய செயலால் ஏற்படும் மனக் கறையைப் போக்கும் ஆற்றல் சாதாரண நன்மைக்குக் கிடையாது. அதை அகற்ற பலமான நன்மை செய்ய வேண்டும்.

ஒரு வைத்தியன் முதலில் வியாதிக்குரிய காரணத்தை ஆராய்கிறான். குறிப்பிட்ட வியாதி உஷ்ண மேலீட்டால் ஏற்பட்டதா அல்லது குளிர் அதிகரித்ததால் ஏற்பட்டா என்று சிந்திக்கிறான். வியாதியின் காரணத்தை அறியாமல் எந்த வைத்தியனும் சிகிச்சை செய்ய முன் வரமாட்டான். காரணத்தை அறிந்து கொண்ட பின்னர் வைத்தியன் வியாதியஸ்தனின் உடல் நிலை, அப்போதைய பருவநிலை, வியாதியின் போக்கு முதலியவற்றை ஆராய்கிறான். இதேபோன்று மெய்ஞ்ஞானிகள் தங்களைப் பின்பற்றி நடக்கும் மக்களின் பண்புகளையும் தன்மைகளையும் உணர்ந்து அதற்குத் தக்கவாறு அவர்களை மனப் பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும்.

ஒரு வைத்தியன் தன்னைத் தேடிவரும் நோயாளிகள் அனைவருக்கும் ஒரே விதமான சிகிச்சை செய்வதால் பயனில்லை. இதேபோன்று எல்லாவிதமான மனோ வியாதியையும் ஒரே விதப் பயிற்சியால் நீக்கிவிட முடியாது. பயிற்சியில் ஈடுபடப்போகும் ஒருவன் அறியாமையில் மூழ்கியவனாயிருக்கலாம். மாரக்கத்தின் வரம்புகளை அவன் உணராதிருக்கலாம். இத்தகையவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி வேறுவிதமானது. முதலில் இவர்களுக்குப் பரிசுத்தம்இ தொழுகை மற்ற வணக்க வகைகளை முதலியவ்றறைப் போதிக்க வேண்டும் பாவச் செயல்களில் ஊறித்திளைப்பவர்கள் பயிற்சியைத் தேடி வரலாம். இவர்களது முதற் பயிற்சி, பாவச் செயலை மறப்பது. அடுத்தபடியாகத் தான் மற்றவைகளெல்லாம். இப்பபடியே ஒவ்வொன்றையும் பார்த்துக் கொள். ஒவ்வொன்றையும் விவரிக்கச் சாத்தியமில்லை.

இப்படித்தான் மனோவியாதிக்குச் சிகிச்சை செய்ய வேண்டும். மனோ வியாதிகள் ஒவ்வொன்றினுடையவும் சிகிச்சையைப் பற்றி எழுதுவது என் நோக்கமல்ல. பொதுவான முறையைச் சுட்டிக் காட்டவே இந்த அத்தியாயத்தை எழுதினேன்.

இந்தப் பாதையிலே மிகவும் முக்கியமானது மன உறுதி. “காமத்தை அடக்கியாள வேண்டும்“ என்று மன உறுதி பூண்டு விட்டால் அதன்படி நடப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல.

## 7. அறிகுறி என்ன?

உடலிலுள்ளஅங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயலுக்காக படைக்கப்பட்டிருக்கின்றது. ஓர் அங்கத்தின் செயல் தடைபட்டால் அல்லது அரை குறையாக வெளிப்பட்டால் அதை அந்த அங்கத்தின் வியாதி என்று குறிப்பிடலாம். கை தன்னுடைய சக்தியை பிடிப்பதற்கும் எடுப்பதற்குமுள்ள தன் ஆற்றலை இழந்து விட்டால் அதைக் கையின் வியாதி என்று சொல்லலாம். சரியானபடிப் பார்க்காவிட்டால் அது கண்ணின் வியாதி.

இதேபோன்று உள்ளம் எதற்காகப் படைக்கப்பட்டதோ எந்தச் செயலுக்காக உண்டாக்கப்பட்டதோ அந்தச் செயல் உருவாகாவிடில் அதை “மனோ வியாதி“ என்று குறிப்பிடலாம். அறிவு, இறைஞானம், இறையன்பு, இறை வணக்கம் முதலிய பொன்னான நோக்கங்களுக்காகவே உள்ளம் படைக்கப்பட்டிருக்கிறது.

“மனிதர்களையும் “ஜின்“ களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன்“ என்று இறைவன் கூறுகிறான்.

ஒவ்வொரு அங்கத்திலும் பயனுண்டு. இதுபோலவே உள்ளத்திலும் பயனுண்டு. அறிவொளி, தெய்வீக ஞானம் முதலிய பயனை அதிலிருந்து அடையலாம். இந்தத் தனித்தன்மை தான் மனிதனை மிருகக் கூட்டத்தினிடமிருந்து பிரித்து உயர்த்துகிறது. மிருகங்களுக்கு இத்தன்மை கிடையாது. அவை எதை அறிந்திருந்தாலும் இறைவனைப் பற்றி அறியும் பேறு அவற்றிற்குக் கிடையாது. அது மானிடனின் சொத்து. இறைவனைப் பற்றி அவை அறியாதிருக்கும் போது மற்ற எந்த அறிவும் அவற்றிற்குப் பயனளிக்காது.

ஒருவன் இறைவனை அறிந்திருந்தால் அதை ஓர் அறிகுறியின் மூலம் அறிந்து கொள்ளலாம் - இறையன்பு! இறைவனை அறிந்தவன் கட்டாயம் அவன் மீது அன்பு செலுத்துவான்! இறையன்புக்கு அறிகுறி என்ன தெரியுமா? உலகை மதிக்காத – அதைத் துச்சமாக எண்ணும் தன்மை! உணவையும் நீரையும் விட அதிகமாகக் கல்லையும் மண்ணையும் விரும்பும் இரைப்பை எப்படி வியாதியுடையதோ, அப்படியே இறைவனை விட அதிகமாக மற்ற எதையும் விரும்பும் உள்ளமும் வியாதியுடையதே!

இதுதான் மனோ வியாதியின் அறிகுறி. இப்படிப் பார்க்கும் பொழுது மிக மிகச் சிலரைத் தவிர்த்து மற்றவர்கள் அனைவரும் மனோ வியாதி கொண்டவர்களே என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. வியாதிகள் பலவிதம். சில வியாதிகள் அவற்றைத் தங்களிடம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கே தோற்றமளிக்காது. இந்த வகையைச் சேர்ந்ததுதான் மனோ வியாதி. இதனால்தான் அனேகர் இது விசயத்தில் அக்கறை செலுத்தாதிருக்கிறார்கள். அதைக் கண்டு கொண்டவர்களோ அதை அகற்றுவதற்குரிய மருந்தின் கசப்பை எண்ணி நடுங்குகிறார்கள். காமத்தை அடக்கியாள்வது என்பது சாதாரண காரியமா என்ன? உடலிலிருந்து உயிரைப் பிடுங்கி எடுப்பது போன்ற கடுமையான காரியம்.

மருந்தின் கசப்புக்குத் துணிந்தவர்கள் சிலர் இருக்கலாம். ஆனால் அவர்களுக்குத் தக்க வைத்தியன் கிடைப்பது அரிதாயிருக்கிறது. மனோ வியாதிக்குச் சிகிச்சை செய்பவர்கள் அறிஞர்கள். இவர்களையும் இந்தக் கொடிய வியாதி பற்றிக் கொண்டு விட்டதே. வைத்தியர்களே நோயாளிகளாகி விட்டார்களே! இவர்களால் என்ன சிகிச்சையைச் செய்ய முடியும்? வியாதி கொண்ட வைத்தியன் சாதிப்பது மிகக் குறைவு. இதனால் மனோ வியாதி முற்றிப் போய்விட்டது. அதற்குரிய வைத்திய சாஸ்திரம் மக்களின் மத்தியிலிருந்து மறைந்து போய்விட்டது. மக்கள் இந்த சாஸ்திரத்தை மறுப்பதுபோல மனோ வியாதியையும் மறுக்க ஆரம்பித்து விட்டார்கள். உலக ஆசாபாசங்களில் உள்ளத்தை பறி கொடுக்கத் துவங்கி விட்டார்கள்.

இந்த நிலையை பயிற்சியின் உதவியால் நல்ல நிலையை நோக்கித் திரும்பும் போது சில அறிகுறிகள் தோன்றுகின்றன. செலவு செய்யும் மனப்பான்மை கஞ்சத்தனம் மாறி வருகிறது என்பதற்கு அறிகுறி. இந்த அறிகுறி வரம்பு மீறிப் போய் “வீண் விரயம்“ என்ற நிலைமைக்குக் கொண்டு போகலாம். குளிர்ச்சியால் ஏற்பட்ட வியாதியைத் தணிக்கப் போய், அதிகமான உஷ்ணத்தைச் செலுத்தி உஷ்ண வியாதியை உண்டாக்குவது போல் தான் இருக்கிறது. இப்படித் தேவைக்கதிகமாகச் செலவு செய்வது மட்டும் என்ன? இதுவும் ஒரு வித மனப்பிணி தான்! நடுநிலை தான் வேண்டப்படுவது. அதைத் தவிர்த்துள்ள மற்ற அனைத்தும் வியாதிகளே!

இதையெல்லாம் எப்படி அறிந்து கொள்வது? முதலில் மனப்பான்மையை ஆராய வேண்டும். பொருளைச் சேர்த்துப் புடம் போடுவதில் உன் உள்ளம் உவகை கொண்டால் அதை செலவிடுவதில் சங்கடமடைந்தால், உன்னிடம் கஞ்சத்தனம் ஓங்கி நிற்கிறது

என்று உணர்ந்து கொள். இந்த நிலைமை உனக்கிருந்தால் மேலும் மேலும் அதிகமாகச் செலவு செய்து பண்பு மாறச் செய்யலாம்.

நடுநிலையைப் பற்றிச் சாதாரணமாக எழுதிவிடலாம். ஆனால் அதைக் கடைப்பிடிப்பது சாதாரண காரியமல்ல. மயிரிழை போன்றது – வாளைப் போன்ற கூர்மையுடையது. மயிரிடை போன்ற நேர்மையும் வாளைப் போன்ற கூர்மையுடைய இந்தப் பாதையில் நடந்து பழக்கப்பட்டு விட்டால், மறுமையின் பாலத்தை எளிதில் கடந்து விடலாம்.

ஈடேற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரும் கிரியாம்சையால் தான் அதை அடைய வேண்டும். நற்காரியங்கள் நல்ல பண்பினால் தான் உண்டாகின்றன. எனவே ஒவ்வொரு மனிதனும் தன் குணத்தையும் தன்மையையும் ஆராய்ந்து பார்க்கட்டும். ஒவ்வொன்றும் முறையே சிகிச்சை செய்யத் துவங்கட்டும்.

இறைவனே! எங்களை எல்லாம் இறையச்சம் பூண்டவர்களாக ஆக்குவாயாக!

## 8. தன் குற்றம் பற்றி...

ஒரு மனிதனின் விசயத்தில் இறைவன் நன்மை செய்ய எண்ணினால், அவனைத் தன் குற்றங்களை உணரச் செய்கிறான். தெளிந்த உள்ளம் கொண்டவர்களுக்குத் தங்கள் குற்றங்களை கண்டறிந்து கொள்வது எளிதான காரியம். தங்கள் குற்றங்களை அறிந்து கொண்ட பிறகு அவற்றிற்குப் பரிகாரம் தேடிக் கொள்வது சாத்தியமே! ஆனால் பெரும்பாலோர் தங்கள் குற்றங்களை துர்ப்பண்புகளை உணராதிருக்கிறார்கள். தன் சகோதரனின் விசயத்திலும் குற்றம் காணும் ஒரு மனிதன், தன்னுடைய குற்றங்களை எல்லாம் கண்டு கொள்ளத் தவறி விடுகிறான்.

தன் குற்றங்களை எப்படி அறிந்து கொள்வது? இதற்கு நான்கு வழிகள் இருக்கின்றன.

1. தெளிந்த உள்ளம் கொண்ட மெய்ஞ்ஞானிக்கு எதிரில் அமர்ந்து அவரது சைக்கினையின்படிச் செயலாற்ற வேண்டும். இது ஒரு மனிதனுக்கும் அவன் பின்பற்றி நடக்கும் பெரியாருக்கும் இடையில் நடைபெறும் முறை. ஆசிரியருக்கும் மாணாக்கனுக்கும் நடுவில் உருப்பெறும் முறை! இந்த முறை தற்காலத்தில் மிகவும் அபூர்வம்! இத்தகையவர்களைக் காணுவதே அரிது!

2. மார்க்கப்பற்றுடைய அகப்பார்வையுடைய சிறந்த நண்பன் ஒருவனைத் தேடியடைய வேண்டும். அவன் மற்றவர்களின் குற்றங்களையும் துர்க்கணங்களையும் கண்டறிந்து எச்சரிக்கை செய்வான். இந்த முறையைத் தான் மார்க்க மேதைகளில் பலர் மேற்கொண்டிருந்தார்கள்.

“ஒரு மனிதன் என் குறைகளை எடுத்துக் கூறினான்!“ என்று உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

இந்த முறையைக் கடைப்பிடிப்பவர்களும் தற்போது மிகவும் குறைந்து போய்விட்டார்கள். குற்றங்குறையை எடுத்துரைக்கும் நண்பனைக் காணுவது அரிதாயிருக்கிறது. உன் நண்பர்களில் பொறாமை கொண்டவர்களும் இருக்கிறார்கள். உன் தவறுகளையெல்லாம் “நேர்மை“ என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் உன் குற்றங்களை உன் கண்ணில் காட்டவே மாட்டார்கள்.

இதன் காரணமாகவே தாவூத் தாயீ எனும் பெரியார் மக்களை விட்டு ஒதுங்கி வாழ்ந்தார்கள்.

இதைப் பற்றி ஒருவர் கேட்டார். “நீங்கள் ஏன் மக்களோடு கலந்துறவாடாமல் ஒதுங்கியிருக்கிறீர்கள்?“

பதில் வந்தது: “என் குற்றங்களை எல்லாம் என் கண்ணில் படாமல் மறைத்துவிடும் மக்களிடம் நான் எப்படி பழக முடியும்?“

தீய மனப்பான்மையை பாம்பு, தேள் என்று கூட சொல்லலாம். நாம் அணிந்திருக்கும் துணிக்கு அடியில் தேள் ஒன்று இருப்பதாக ஒருவன் நம்மிடம் கூறினால் அது குறித்து நாம் சந்தோஷப்பட வேண்டுமே தவிர, வருந்தக் கூடாது. உடனே தேளை அப்புறப்படுத்துவதற்குரிய வேலையைப் பார்க்க வேண்டும். இது வேதனை தரும் விசயம் - அதுவும் உடலுக்கு! தேள் கடித்தால் ஒரு நாளைக்கு அல்லது அதைவிட குறைந்த நேர அளவிற்கு வேதனைப் படும்படியாகும். அவ்வளவுதான். இதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. ஆனால் பாவத் தேள் உள்ளத்தில் கடித்து விட்டால் அதன் வேதனை இம்மையில் மட்டுமல்ல. மறுமையிலும் நீடித்து நிற்கும்.

ஆனால் நம்முடைய நிலைமை என்ன? நம் குற்றத்தைத் தப்பித் தவறி யாராவது கூறிவிட்டால் அதைக் களைய முயற்சி செய்கிறோமா? இல்லையே. “நீயும் தான் குற்றம் செய்கிறாய்!“ என்று திருப்பிக் கேட்கிறோம். விரோதித்துக் கொள்கிறோம். அவனது போதனையால் பயனடைவதை விட்டுப் பகைமை வளர்த்துக் கொள்கிறோம். இதற்கு அடிப்படையான காரணம்இ ஈமானின் பலவீனம்.

இறைவா! எங்கள் குற்றங்களை கண்டுணர்ந்து நேர்வழியடையும் ஆற்றலைத் தந்தருள்வாயாக!

3. எதிரிகளின் நாவின் உதவியால் தன் குற்றங்களை ஓரளவு அறிந்து கொள்ளலாம். தவறான கண் கொண்டு பார்க்கும் எதிரிகளால் உன் குற்றங்களை எளிதில் கண்டுபிடித்துவிட முடியும். நண்பரின் புகழுரையிலிருந்து அடையும் பலனை விடப் பன்மடங்கு அதிகப் பயனை விரோதியின் நிந்தனையிலிருந்து அடையலாம்! ஆனால் எதிரியின் வார்த்தையை மட்டம் தட்டுவதில் தான் எல்லோரும் ஆர்வம் கொள்வார்கள். அவனைப் “பொய்யன்“ என்று கூறுவார்கள். எனினும் நன்மதியுடையவர்கள் எதிரியின் நிந்தனையையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

4. மக்கள் மத்தியில் நன்கு கலந்துறவாட வேண்டும். அவர்களிடம் தவறு ஒன்றைக் கண்டால் அது போன்ற தவறு தன்னிடம் இருக்கிறதா என்று ஆராய வேண்டும். முஃமினுக்கு முஃமின் கண்ணாடியல்லவா? நீ முஃமின் அல்லவா? உன்னால் மற்றவனின் குற்றங் குறைகளைக் காண முடியும். அதன் பின்னர் அந்தக் குற்றங்கள் - குறைகள் உன்னிடம் இருக்கின்றனவா இல்லையா, ஆராய்ந்து அறியலாம். இச்சைக்கு அடிபணியும் விசயத்தில் மக்கள் அனைவரும் ஏறத்தாழ ஒரே இனத்தவராகத் தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் துழாவி ஆராய வேண்டும். மற்றவர்கள் விசயத்தில் நீ துர்ப்பண்புகளாய் கருதும் ஒவ்வொன்றையும் உன் உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்து. அது போதும் உனக்கு. மக்கள் அனைவரும் பிறரிடம் தாங்கள் வெறுக்கும் தன்மைகளை விட்டு விடுவார்களாயின் அவர்கள் அனைவரும் நற்பண்பினர்களாக மாறிவிடுவார்கள். போதித்துத் திருத்தக் கூடிய எந்தச் சீர்திருத்த வாதியும் தேவையில்லாமற் போய் விடும்.

“உங்களை திருத்தியது யார்?“ என்று நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் யாரோ கேட்டார்கள்.

"யாருமே என்னைத் திருத்தவில்லை!" என்று விடையிறுத்தார்கள் நபியவர்கள். "முட்டாளின் மடமையைப் பார்த்தேன். அதைக் கேவலமாய் மதித்தேன். அத்தகைய தன்மையை என்னை விட்டு அகற்றினேன். இப்படி என்னை நான் திருத்திக் கொண்டேன்!"

உன் தவறுகளைத் திருத்தும் உண்மையான மெய்ஞ்ஞானி ஒருவரை நீ அடைந்து விட்டால் அவர்தான் உனக்கு வைத்தியம் செய்ய வந்திருக்கும் வைத்தியர் என்று அறிந்து கொள். உன்னைப் பிணியின் பிடியிலிருந்து காப்பாற்றி ஈடேற்றப் பாதையில் நடக்கச் செய்வது அவருடைய காரியம்!

## 9. பெரியோர்களின் கருத்துக்கள்

மேலே நான் கூறியவற்றை நீ நன்கு கவனித்தால் உன் அகப்பார்வையின் கதவு தானாகத் திறந்து கொண்டு விடும். மனத்தில் வியாதியையும் அதற்குரிய காரணங்களையும் சிகிச்சை முறையையும் நீ அறிந்து கொள்ளலாம். இவை அனைத்தும் அறிவொளியின் உதவியால் தான் சாத்தியம். காமத்தின் கூப்பாட்டுக்கு முரண் செய்வதே இறை பாதை என்ற நம்பிக்கை. இது பிரதானமான ஒன்றாகும். அறிவுக்குப் பல படித்தரங்கள் இருப்பது போல இந்த நம்பிக்கைக்கும் பல படித்தரங்கள் இருக்கின்றன.

"நம்பிக்கை கொண்டவர்களை இறைவன் உயர்த்துகிறான். அறிவு தரப்பட்டவர்களுக்குப் பல பதவிகள் இருக்கின்றன" என்று திருமறை கூறுகிறது. காமத்தின் இழுப்புக்கு எதிராக நடப்பது தான் நன்மார்க்கம் என்று நம்பியவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களைப் பற்றித் தான் "நம்பிக்கைக் கொண்டவர்கள்" என்று மேலே குறிப்பிடப்படுகிறது. இந்த நம்பிக்கையோடு நின்று விடாமல், அதைப் பற்றிய மர்மங்கள் -நுட்பங்கள் பலவற்றையும் சிலர் அறிந்திருப்பார்கள். இவர்கள் "அறிவு தரப்பட்டவர்கள்".

இதைப் பற்றிக் குர்ஆனிலும் ஹதீதிலுமாக எண்ணற்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இந்தச் சிறிய நூலில் கூறி முடிக்க முடியாது.

"இச்சையைத் தடுத்து வெற்றிக் கொண்டவர்கள்" என்று இறைவன் பாராட்டுகிறான். "இவர்கள் ஒதுங்கும் இடம் சுவனம்" என்கிறான்.

வாட்போர் புரிந்து வாகை சூடி வரும் நண்பர்களைப் பார்த்து அண்ணலவர்கள் கூறினார்கள்: "உங்களைப் பாராட்டுகிறேன். சிறிய யுத்தத்திலிருந்து திரும்பி வந்திருக்கிறீர்கள். பெரிய யுத்தத்தில் ஈடுபடுங்கள்."

"நபியவர்களே! பெரிய யுத்தம் என்றால் என்ன?" என்று யாரோ கேட்டார்கள்.

அண்ணலவர்கள் விடையிறுத்தார்கள்:

"அதுதான் மனப்போராட்டம், உள்ளத்தோடு போராடும் கடும் போராட்டம்".

"இறைவழியில் தன் இச்சையோடு போராடி வெற்றி கண்டவனே உண்மையான வெற்றி வீரன்" என்றும் கூறியிருக்கிறார்கள்.

சுப்யான் தௌரீ ரஹிமஹுல்லாஹ் கூறினார்கள்:

"என் உள்ளத்தைப் போன்று அத்தனை கடினமான சிகிச்சையை எனக்கு வேறு யாரும் செய்யவில்லை. சில சமயம் அது எனக்கு சாதகம் செய்கிறது. வேறு சில சமயம் பாதகம் புரிகிறது!"

அபுல் அப்பாஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமக்குத் தாமே கூறிக் கொண்டார்கள்:

"மனமே! நீ இவ்வுலகில் இளவரசர்களைப் போன்று இன்பமடையவதுமில்லை. மறுமை வாழ்க்கையைத் தேடி உத்தமர்களைப் போல செயல் புரிவதுமில்லை. உன்னால் நான் நரகத்துக்கும் சுவனத்துக்குமிடையில் தடுமாறுகிறேன். வெட்கமில்லையா உனக்கு – மனமே. வெட்கமில்லையா?"

யஹ்யா பின் மஆத் கூறினார்கள்: "பயிற்சி எனும் வாளின் உதவியால் உன் இச்சையோடு போராடு"

பயிற்சிக்கு அடியிற்கண்ட நான்கு காரியங்கள் அவசியமாகும். உணவைக் குறைத்துக் கொள்வது, தூக்கத்தைச் சுருக்கிக் கொள்வது, உரையாடலை மட்டுப்படுத்திக் கொள்வது, மக்களால் ஏற்படும் துன்பங்களைச் சகித்துக் கொள்வது. உணவைக் குறைத்துக் கொள்வதால் காமத்தின் வேகம் முறியடிக்கப்படுகிறது. தூக்கத்தைச் சுருக்கிக் கொள்வதால் தெளிவான எண்ணங்கள் உற்பத்தியாகின்றன. உரையாடலை மட்டுப்படுத்திக் கொள்வதால் பல்வேறு துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது. துன்பத்தைச் சகித்துக் கொள்வதால் படித்தரம் உயர்கிறது.

இச்சையை அடக்கிக் கொள்வது போன்ற கடினமான ஒன்று கிடையாது. பொறுமையும் இப்படிப்பட்டதுதான். பாவத்தைப் பற்றிய எண்ணமும் காமத்தைப் பற்றிய இன்பமும் உள்ளத்தில் நடமாட ஆரம்பித்து விட்டால், வீணான உரையாடல் நிகழ்த்துவதில் தித்திப்புத் தோன்ற ஆரம்பித்து விடும். அதன்பிறகு குறைத்து உண்ணுதல், குறைவாகத் தூங்குதல் எதுவும் நடைபெறாது. திறந்த வெளியில் வெருண்டோடும் குதிரையைப் போல் உணர்ச்சிகள் கட்டுமீறிப் பாய ஆரம்பித்து விடும். தோட்டத்தில் உலாவும் அரசனையும் ஒப்பிடலாம்.

"மனிதனின் விரோதிகள் மூவர். உலகம், சைத்தான், மனம். துறவறத்தை மேற்கொண்டு உலகின் தீங்கிலிருந்து தப்பலாம். சைத்தானுக்கு எதிரிடையாக நடப்பதால் அவன் தீங்கு நீங்கும். காமத்தை ஒடுக்குவதால் மனத்தின் தீங்கு மாறும்!" என்று யஹ்யா பின் மஆத் கூறியுள்ளார்கள்.

"உலக ஆசாபாசங்களை விரும்பியவன் கேவலத்திற்கும் இழிவிற்கும் தயாராக இருக்க வேண்டியதுதான்" என்றும் கூறப்படுகிறது.

ஒரு சமயம் ஸுலைகா கூறினார்கள்:

"அரசர்கள் பாவத்தின் காரணமாக எவ்வளவு தூரம் கேவலப்படுகிறார்கள். பேராசையும் காமவெறியும் மதிப்புள்ள அரசர்களையெல்லாம் அடிமைகளாக்கி விடுகின்றனவே! இதுதான் அவர்களுக்குரிய தண்டனை. பொறுமையும் இறையச்சமும் அடிமைகளை அரசர்களாக்கும் தன்மையுடையவை!"

நபி யூசுப் அலைஹிஸ்ஸலாம் இதற்கு விடையளித்தார்கள்:

"ஆமாம். சந்தேகமில்லை. இறைவனுக்கு அஞ்சி நடந்து பொறுமையை மேற்கொண்டவர்களின் கூலியை இறைவன் குறைக்க மாட்டான்".

மாலிக் பின் தீனார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விந்தையான பழக்கத்துடன் காணப்பட்டார்கள். கடைத் தெருவெங்கும் சுற்றித் திரிவது அவர்கள் வழக்கம். அவர்களின் விருப்பத்திற்குரிய பொருட்கள் கண்ணில் பட்டால் தமக்குத் தாமே சமாதானம் சொல்லிக் கொள்வார்கள். "மனமே! பொறுமையோடிரு! உன் நன்மைக்காகவே கூறுகிறேன்" என்பார்களாம்.

இச்சையை அடக்கியாள்வது தான் இறைவழி என்பதில் அறிஞர்கள் அனைவரும் ஏகோபித்த அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இதைச் சந்தேகமின்றி நம்புவது அவசியமாகும்.

இச்சையயை அடக்கியாள்வது அவசியமாயினும் எல்லா நேரத்திலும், எல்லா விசயத்திலும் இது அவசியமல்ல. எது விசயத்தில் இச்சை கொள்ளலாம். எது விசயத்தில் இச்சை வைக்கக் கூடாது என்று விபரிப்பது சாத்தியமில்லை. அது விரிவான விசயம். இச்சிறிய நூல் இடம் தராது.

மேலே நான் கூறியவற்றிலிருந்து ஓரளவுஅறிந்து கொள்ளலாம். சுருங்கக் கூறுமிடத்து மண்ணறையில் கிடைக்காத, கிடைக்க முடியாத ஒன்றின் மீது மனத்தை லயிக்க விடக்கூடாது எனலாம். இது போன்ற விசயத்தில் மிகவும் குறைந்த அளவில்தான் மனத்துக்கு இடமளிக்க வேண்டும். அவற்றிலேயே மூழ்கிவிடக் கூடாது. உணவு, விவாகம், உடை, இடம் முதலியவற்றோடு தேவைகளைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். இவற்றில் அளவுக்கு மீறிய அக்கறை செலுத்துவது அபாயம்.

ஏனெனில் மனிதன் மாண்ட பிறகு அவற்றிற்காக மறுதடவை அவன் மாநிலத்திற்கு வரப்போவதில்லை. அவனுக்கு என்னவோ அந்த எண்ணம் இருக்கத் தான் செய்யும். மீண்டும் ஒருதடவை உலகில் பிறக்க மாட்டோமா! என்று எண்ணும்படியாகும். எண்ணிப் பயன் என்ன? இவனுக்கு இம்மை கிட்டப் போவதில்லை. மறுமையும் கிட்டவில்லை. பரிதாபம்!

உள்ளத்தை இறை பாதையில் திருப்பிவிட்டால் இந்தத் தொல்லைகள் எதுவும் கிடையாது. இறை சிந்தனை, தியானம், வணக்கம் - இவை தாம் அவனது வேலைகள். இவற்றிற்கு இடையூறு ஏற்படாமல் தடுப்பவற்றை அவன் அளவுக்கு அதிகப்படாமல் விரும்புவான். உணவில்லாவிடில் அங்கங்கள் சோர்வடைந்து விடுமல்லவா? இத்தடையைப் போக்குவதற்கு அவனுக்கு உணவு தேவை. இதன் தத்துவத்தை இப்போதாகிலும் உணர்ந்து கொள்.

இது விஷயத்தில் மக்களை நான்கு பிரிவினர்களாய் பிரிக்கலாம்.

1. இறைவனின் பாதையில் தங்கள் கவனம் அனைத்தையும் செலுத்தியவர்கள். வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான ஒரு சிலவற்றைத் தவிர்த்து மற்ற எந்த விசயத்தையும் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். இவர்கள் உயர்ந்தவர்கள். நீண்ட நாள் பயிற்சிக்குப் பிறகே இந்தப் படித்தரத்தை அடைய முடியும். வெகுநாள் காமத்தோடு போராட வேண்டியிருக்கும்.

2. உலக ஆசாபாசங்களில் மூழ்கியவர்கள். இவர்களின் உள்ளத்தில் இறைவனுக்கு இடமிருக்காது. சில சமயங்களில் இவர்களின் நாவுகளில் இறை திருநாமம் அடிபடுவதுண்டு. ஆனால் அதற்கும் உள்ளத்திற்கும் யாதொரு தொடர்பும் இருக்காது. இவர்கள் வழி கெட்டவர்கள்.

3. மார்க்கத்திலும் உலகிலும் ஈடுபட்டவர்கள். உலகைவிட இவர்கள் மார்க்கத்தைத்தான் அதிகம் விரும்புவார்கள். இவர்களுக்கு வெற்றி கிடைப்பது சாத்தியம். இவர்களின் உள்ளத்தில் படிந்திருக்கும் இறைதியானத்தைப் பொறுத்து இவர்களுக்கு மறுமையில் உயர்வு உண்டு.

4. மார்க்கத்தை விட உலக இன்பத்தை அதிகமாக விரும்புவார்கள். இவர்கள் மறுமையில் நீண்ட நாள் தண்டனை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். இறைவனின்

விஷயத்தில் இவர்களுக்கு ஒரு கண் இருப்பதால் மிகுந்த சிரமத்திற்குப் பிறகு இவர்கள் வெற்றி காணலாம்.

இங்கு ஒரு வினா உதயமாகிறது. "உலக இன்பங்களைத் திருமறை அனுமதிக்கிறது. அவற்றை இறைவழி செல்ல முடியாது என்று எப்படிக் கூற முடியும்?

இது தவறான பலவீனமான எண்ணம். உலக இன்பத்தை விரும்புவது தான் எல்லா பாவங்களுக்கும் சிரம் போன்றது. அவசியமான இன்பத்தைப் பற்றிப் பேச்சில்லை. அவசியமற்ற இன்பங்கள் அனைத்தும் இறை பாதையில் குறுக்கிடும் முள் வேலிகளே! இதைப் பற்றி "உலகின் இழிவு" என்னும் நூலில் விரிவாய் எழுதியிருக்கிறேன்.

புறம் பேசக் கூடாது என்று எண்ணுபவன் முதலில் வாய் மூட வேண்டும். சாதாரணப் பேச்சுக்கு மார்க்கத்தில் தடையில்லாவிட்டாலும் வாய்மூடித்தான் ஆக வேண்டும். இல்லையேல் சாதாரண பேச்சு அசாதாரணப் பேச்சாய் மாறிப் "புறம்" என்னும் நிலைமைக்கும் வந்துவிடும். இப்படி அவன் வாய் மூடியிருப்பதே ஒரு வகையில் வணக்கம்தான். இப்படி நடப்பதால் நாளடைவில் "பேச்சின்பம்" அழிந்து விடும். உண்மையைத் தவிர்த்து – அவசியமானதை விடுத்து வேறு எதையும் பேச மாட்டான். அவனுடைய மௌனத்தைப் போல அவன் பேச்சும் வணக்கமாய் மாறிவிடும்.

அழகிய பொருட்களைப் பார்த்து பழக்கப்பட்ட கண்களுக்கு பார்க்கக் கூடாதவற்றைப் பார்க்காமல் தடுத்துக் கொள்ளும் ஆற்றல் கிடையாது.

இதேபோன்றது தான் எல்லா உணர்ச்சியும். "ஹலாலா"னவற்றில் இன்பம் காணும் உணர்ச்சி நாளடைவில் "ஹராமா"னவற்றிலும் இன்பம் காண ஆரம்பித்து விடும். காமம் - இச்சை என்பது ஓர் உணர்ச்சி. "ஹராமா"னவற்றின்பால் அதைச் செல்ல விடாமல் தடுப்பது ஒவ்வொ மனிதனுக்கும் கடமை. அவசியமான அளவுடன் அது திருப்தியடையாவிடில் அபாயம்தான். அதற்குப் பின்னால் பேராபத்துக்கள் பல காத்திருக்கின்றன.

உள்ளம் முதலில் உலக இன்பத்தை நுகர்ந்து பார்க்கும். பின்னர் அதில் மையல் கொள்ளும். பிறகு பேருவகை அடையும். அடுத்தபடியாகப் போதையில் சிக்கிக் கொள்ளும். இந்தப் போதை என்றைக்குமே தெளியாது.

உலக இன்பம் என்பது கொடிய விசம். அது நரம்புகளில் விரைந்து சென்று இறையச்சம், மரணம் பற்றிய எண்ணம் முதலிய அனைத்தையும் உள்ளத்திலிருந்து பிடுங்கி எறிந்து விடும். இந்த நிலையைத்தான் "மரணம்" என்று குறிப்பிடுகிறோம்.

"உலக வாழ்க்கையை விரும்பியவர்கள் அதில் திருப்தியடைந்தவர்கள்" என்று இழித்துரைக்கிறான்.

"உலக வாழ்க்கை மிகவும் அற்பமானது" என்றும் குறிப்பிடுகிறான்.

இன்னும் கூறுகிறான்: " அறிந்து கொள்ளுங்கள்.உலக வாழ்க்கை என்பது விளையாட்டு, வீண் காரியம், அலங்காரம், தற்பெருமை, பொருள் திரட்டல், மக்களை விருத்தி செய்தல் - இவைதாம்" இவை அனைத்தும் இழிவிற்குரியவைதானே! எனவே இறைவனிடமே நாம் மன்றாட வேண்டியிருக்கிறது.

உள்ளத்தின் தன்மையைச் சிலர் ஆராய்ந்தார்கள். "உலக இன்பத்தில் லயித்திருக்கும் போது அதன் நிலை என்ன?" என்பது பற்றி சிந்தித்தார்கள். "அப்போது இறை தியானத்திற்கு வழியே கிடையாது" என்றார்கள். ஆனால் அதே உள்ளம் துயர

வசப்பட்டிருக்கும் நிலைமை நேர்மாறானது. எனவே தியானத்தில் இன்பம் கண்ட அவர்கள் அடியிற் கண்ட முடிவிற்கு வந்தார்கள். நிரந்தரத் துன்பத்தில் தான் ஈடேற்றம் உண்டு. மகிழ்ச்சியிலே - இன்பத்திலே அதைக் காண முடியாது.

இவையெல்லாம் நினைத்தும் பின்பற்றக் கூடிய காரியங்களல்ல. ஆரம்பத்திலே இது மிகவும் கடினமாய்த் தோன்றும் -குழந்தை பால் குடியை மறப்பது போல். பால்குடி மறக்கடிப்பது சிரமமான காரியம். தாய்ப்பால் இல்லாமல் குழந்தையால் அரை விநாடியும் கழிக்க முடியாது. எனவே அது அலறும். கால்களையும் கைகளையும் உதறிக் கொண்டு கதறும். பாலுக்குப் பதிலாயக் கொண்டுவரப்பட்ட உணவை வெறுக்கும். இது ஆரம்ப நிலை. ஆனால் நாளடைவில் அது பாலை முற்றிலும் மறந்து விட்டால் தானாகவே உணவின் பக்கம் திரும்பி விடும். பின்னர் உணவு அதன் ஜீவநாடியாகிவிடும். அதன்பிறகு அந்தச் சிறுவனுக்குத் தாய்ப்பால் புகட்ட முடியாது. முதலில் உணவை வெறுத்தது போல் அவன் இப்போது தாய்ப்பாலை வெறுப்பான்.

குதிரை முதலிய மிருகங்களையும் இப்படித்தான் பழக்க வேண்டும். ஆரம்பத்தில் குதிரை கடிவாளத்தையும் சேணத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. மிருகத்தை நாம் பழக்குவது போல நம் மனத்தைப் பழக்க வேண்டும். இன்பத்தில், மகிழ்ச்சியில் அதை லயிக்க விடக் கூடாது. மரணத்தால் இறக்க வேண்டிய ஒவ்வொன்றையும் உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டும். "நீ எதை வேண்டுமானாலும் விரும்பு. ஆனால் நீ அவை அனைத்தையும் விட்டுப் பிரிபவனே என்பதை மட்டும் மறந்து விடாதே!" என்று மனத்தைப் பார்த்துக் கூற வேண்டும்.

விரும்பும் ஒவ்வொன்றும் நம்மை விட்டுப் பிரிவதாயிருந்தால், நம்மை விட்டுப் பிரியாத ஒன்றை விரும்புவதுதான் நியாயம். அப்படி ஒன்று இருக்கிறதா? இருக்கிறது - இறை எண்ணம், இறை தியானம்! இவை என்றைக்குமேம பிரியமாட்டா! மண்ணறையிலும் இவற்றைப் பிரிய வேண்டிய நிலை ஏற்படாது. இவற்றிற்கெல்லாம் முதற்படி பொறுமை. பொறுமையால் தான் எதுவும் பூரணத்துவம் அடைய முடியும்.

"சில நாட்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்... ஆமாம். மறுமை வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கும் போது இம்மையின் வாழ்க்கை எல்லாம் "சில நாட்கள்" தாம். ஓர் ஆண்டிற்கு அல்லது ஆயுள் முழுமையும் இன்பமடைவற்காகப் பிரயாணத்திலும் வியாபாரத்திலுமாக ஒரு மாதம் - ஒரே ஒரு மாதம் கஷ்டப்படுவதை எந்த அறிவுள்ள மனிதனும் வெறுக்க மாட்டான். வறுமை வாழ்க்கையை ஒரே ஒரு மாதம் என்றுதான் சொல்ல வேண்டும். "ஒரே ஒரு மாத" காலத்தைப் பொறுமையிலும் மனப் போராட்டத்திலும் கழிக்க வேண்டும். இந்தப் போராட்டம் மரணத்துடன் முடிவுற்று விடும். அதன் பிறகு நிரந்தர வாழ்க்கை என்றென்றுமுள்ள மறுமை வாழ்க்கை.

## 10. சிறுவர் சிறுமியர் குறித்து

சிறுவர் சிறுமியருக்குப் பயிற்சியளிப்பது மிகவும் முக்கியமான காரியமாகும். சிறுவனைப் பேணி வளர்த்துப் பண்பாடடையச் செய்வது பெற்றோரின் பொறுப்பு. சிறுவனின் உள்ளம் பரிசுத்தமானது. தெளிவானது. எந்தக் கருத்தையும் ஏற்கும் தன்மையுடையது. எந்த அறிவுக்கும் அதில் வித்திடலாம். நற்காரியங்களை அதில் விதைத்து அதைப் பற்றிய அறிவை அதில் தெளித்தால் இம்மை மறுமை இரண்டிலும் அவன் வெற்றிக் கொடி நாட்ட முடியும். இவனுக்கு அளிக்கப்படும் பெருமைகளில் இவன் பெற்றோருக்கும் பங்குண்டு. பெற்றோருக்கு மட்டுமல்ல, ஆசிரியருக்கும் உண்டு. அந்த

உள்ளத்தில் தீமையை விதைத்தால் மிருகங்களை விடக் கேடுகெட்டவனாய் மாறி விடுவான்…

“விசுவாசிகளே, உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்“ என்று இறைவன் கூறுகிறான்.

தந்தை ததன் மைந்தனை நெருப்பிலிருந்து காப்பாற்றுகிறான். அவன் மீது நெருப்பு படுவதை விரும்ப மாட்டான். ஆனால் இது சாதாரண நெருப்பு. மறுமையின் நெருப்பிலிருந்து அவனைக் காப்பாற்றுவது தான் முக்கியம். படிப்பினையாலும் போதனையாலும் பயிற்சியாலும் மறுமை நெருப்பிலிருந்து காப்பாற்ற முடியும். இதுதான் அதற்கு வழி!

சிறுவனின் உள்ளத்தில் தூய எண்ணங்களை உண்டாக்க வேண்டும். கெட்டவர்களோடு பழக விடக் கூடாது. அவனிடம் கெட்ட பழக்க வழக்கங்களை அனுமதிக்கக் கூடாது. இன்பத்திலும் மகிழ்ச்சியிலும் அவன் உள்ளம் பற்றுதல் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீண் விரயம், அலங்காரம் முதலியவற்றை அவன் வெறுக்குமாறு செய்ய வேண்டும். இவற்றிலே தவறு நேர்ந்தால் அவன் ஆயுள் முழுவதும் பாழ். அவன் வளர்ந்து விட்ட பிறகு அவசியத்தை அவனால் உணர முடியாது. தவறான பாதையில் பாய்ந்து செல்வான். ஆகவே தான் எந்தப் பயிற்சியையும் பிஞ்சு மனத்திலேயே பதிய வைக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

அவனை வளர்ப்பதற்கும் பால் ஊட்டுவதற்கும் நற்பண்புள்ள பெண்மணியை அமர்த்த வேண்டும். அவள் நல்லல உணவை - ஹலாலான உணவை உட்கொள்ள வேண்டும். ஏனெனில் தவறான - ஹறாமான உணவிலிருந்து உற்பத்தியாகும் பாலில் மங்களத் தன்மை கிடையாது. அந்தப்பால் வளர்ந்து வரும் குழந்தையின் உள்ளத்தில் தன்னாலியன்ற “கைவரிசை“யைச் செய்யும். ஆரம்பமே இப்படியாகிவிட்டால் முடிவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

சிறுவன் வளர்ந்து கருத்தறியும் பிராயத்தை அடையும் போது நற்பண்புகளை அவன் மனத்தில் பதிய வைக்க வேண்டும். இந்தச் சமயத்தில் அவனிடம் “வெட்கம்“ தலைதூக்கும். ஏதேனும் ஒரு செயலை அவன் வெட்கத்தின் காரணமாய்ச் செய்யாது விட்டுவிட்டான் என்றால், அப்போது தான் அறிவொளி பளிச்சிடுகிறது என்று புரிந்து கொள்ளலாம். அதன் பிறகு வேறு சிலவற்றைக் “கேவலமானவை“ என்று எண்ணுவான். வேறு சிலவற்றை “மேலானவை“ என்று எண்ணுவான். எனவே சிலவற்றை வெறுக்கும் அவன் வேறுசிலவற்றை விரும்புவான். வெறுப்பிற்குரியதைச் செய்வதற்கு அவன் வெட்கப்படுவான். இதை இறையருள் என்றுதான் குறிப்பிட வேண்டும். தன்மைகள் நடுநிலையில் இயங்க ஆரம்பித்து விட்டன என்பதற்கு இது ஓர் அறிகுறி.

இப்படி ஒரு சிறுவனிடம் கெட்ட மனப்பான்மையைக் கண்டால் அவனை அப்படியே விட்டு விடக் கூடாது. மேலும் மேலும் போதிக்க வேண்டும். சீர்திருத்த வேண்டும். முதில் ஏற்படுவது உணவாசை. இதன் விசயத்தில் நடுநிலையையும் பண்பாட்டையும் போதிக்க வேண்டும். “வலக்கரத்தால் தான் உணவை எடுத்து உண்ண வேண்டும்“ என்று கூற வேண்டும். உட்கொள்ளத் துவங்கும்போது “பிஸ்மில்லாஹி“ சொல்ல வேண்டும் என்றும், சாப்பாட்டின் விஷயத்தில் மற்றவர்களை முந்திக் கொண்டு பாயக் கூடாது என்றும் அவனுக்குப் போதிக்க வேண்டும். உணவையோ அதை உட்கொள்ளும் மற்றவர்களையோ முறைத்துப் பார்க்கக் கூடாது. விரைவாகப் புசிக்கக் கூடாது. இப்படியெல்லாம் போதிக்க வேண்டும். அதிகமாய்ப் புசிக்கும் குழந்தைகளை

அவனுக்கெதிரில் இகழ்வதால் - குறைவாகப் புசிக்கும் குழந்தைகளைப் பாராட்டுவதால் நல்ல பலனை அடையலாம். அவன் உள்ளத்தில் இது குறிப்பிடத்தக்க மாற்றத்தை விளைவித்து விடும்.

உடையின் விஷயம் அடுத்து வருகிறது. வர்ண உடைகளை விடுத்து வெண்மையான ஆடைகளில் அவனுக்குப் பிரியத்தை உண்டாக்க வேண்டும். பட்டை அவன் கண்களில் காட்டக் கூடாது. வர்ணத் துணி, பட்டாடை முதலியவை பெண்களுக்குரியவை என்று அவன் மனத்தில் பதியுமாறு கூற வேண்டும். வீண் விளையாட்டுக்களிலும், உடையின் விசயத்தில் அதிகக் கவனம் செலுத்துவதிலும் பழக்கப்பட்ட சிறுவர்களுடன் அவனைக் கலந்துறவாட விடக் கூடாது.

பின்னர் பள்ளிப் பருவம், திருமறை, நபிமணி மொழி, பெரியோர் வரலாறு, முன்னோர் கருத்து - இப்படி ஒவ்வொன்றையும் போதிக்க வேண்டும். அதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். நற்போதனை தரும் கவிதைகளை அந்த இளம் உள்ளத்தில் தூவ வேண்டும். இதனால் அவன் நல்லவர்களையும் அறிஞர்களையும் விரும்பும் சுபாவத்தைப் பெறுவான். அவனிடமிருந்து நற்செயல் வெளிப்பட்டால் அவனைப் பாராட்ட வேண்டும். இதனால் அவனுடைய நல்லுணர்வு வலுவடைகிறது. அப்படி அவன் தப்பித் தவறி ஒருதடவை தவறிழைத்து விட்டால் அதை மன்னித்து விட வேண்டும். மறந்து விட வேண்டும். கிண்டிக் கிளரி அந்தப் பிஞ்சு உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது. அதைப் பற்றி யாரிடமும் கூறக் கூடாது. ஆனால் அதே தவற்றை அவன் மறுதடவை செய்தால் இரகசியமாய்க் கண்டிக்கலாம். “இதோ பார்! மறுபடியும் இந்த வேலையைச் செய்தாயோ நான் சும்மா இருக்க மாட்டேன். இதை மக்கள் அறிந்தால் நீ மிகவும் கேவலப்படுவாய்!“ என்று எச்சரித்தால் போதும். அதற்குமேல் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

இப்படிச் செய்தால் அவனுக்கு உண்மை தெரிந்து விடும்.

நன்மைக்குப் பாராட்டுக் கிடைப்பதுபோல் திண்மைக்குத் தண்டனை கிடைக்கிறது என்று உணர்ந்து கொள்வான்.

தந்தை தன் மைந்தனோடு அதிகமாகப் பேசக் கூடாது. மதிப்போடு நடந்து கொள்ள வேண்டும். அவனுடைய போதனைக்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தாய் தன் தனயனைத் தந்தையைக் காட்டிப் பயமுறுத்த வேண்டும். அவனைப் பகலில் தூங்க விடக் கூடாது. ஏனெனில் இது சோம்பேறித் தனத்தை இழுத்து வருகிறது. இரவில் அவன் தாராளமாயத் தூங்கட்டும். அவன் உடலை அளவுக்கதிகமாய்ப் பருக்காமல் கவனித்துக் கொள்வது அவசியம். பெற்றோருக்குத் தெரியாமல் அவன் செய்யும் ஒவ்வொரு செயலையும் தடுக்க வேண்டும். ஏனெனில் ஒன்றைக் கேவலமானது – செய்யத் தகாதது என்று அவன் கருதினால் தான் அதை மறைவிடத்தில் செய்ய முற்படுகிறான். இப்படிச் செய்யப்படுபவை பெரும்பாலும் செய்யத் தகாதவையே. சோம்பேறித் தனத்தைத் தடுப்பதற்காக அவவனை பகல் நேரத்தில் பயிற்சி, நடை முதலியவற்றில் ஈடுபடுத்தலாம். சற்றுத் தூரம் காலார நடக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தலாம்.

தன்னிடமுள்ள பொருள்களைக் காட்டித் தன் நண்பர்களுக்கு மத்தியில் அவன் பெருமையடித்துகு கொள்கிறானோ என்று ஊன்றிக் கவனிக்க வேண்டும். தன் பெற்றோர்களின் உடைமைகள், தான் புசிக்கும் உணவு வகைகள், தான் அணியும் ஆடைகள் முதலியவை அவன் பெருமையடித்துக் கொள்வதற்குப் பயன்படுகின்றன.

இப்படியெல்லாம் அவனை செய்ய விடக் கூடாது. நண்பர்களோடு எப்படிப் பழக வேண்டும். அவர்களிடம் எந்த முறையில் உரையாட வேண்டும் என்றெல்லாம் போதிக்க வேண்டும்.

பிறருடைய உடைமையை அவன் விரும்பக் கூடாது. “இதில் பெருமையில்லை. உன் உடைமையைப் பிறருக்குக் கொடு. அதில்தான் பெருமையுண்டு.“ என்று அவனிடம் கூற வேண்டும். ஏழைச் சிறுவர்களுடைய மனப்பான்மை பிறர் உடைமையைப் பார்த்து ஆசைப்படுவதில் ஆர்வங் கொண்டது. “பிறருடைய பொருளை விரும்புவதும், அதைப் பறித்துக் கொள்வதும் நாயின் குணங்கள்… மனிதனாகிய நீ உயர்ந்தவனாயிருக்க வேண்டும்“ என்று போதிக்கலாம்.

பொதுவாய்க் கூறினால், தங்கம், வெள்ளி முதலியவற்றின் மீது ஆசை ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் எனலாம். பாம்பு, தேள் ஆகியவற்றைவிடக் கடடினமான முறையில் அவற்றைப் பார்த்து அவனை நடுங்கச் செய்ய வேண்டும். பாம்பினால், தேளினால் ஏற்படும் நச்சு விபரீதத்தை விடக் கொடிய விளைவு பொன், வெள்ளி மோகத்தால் சிறுவர்களுக்கு ஏற்பட முடியும். இது சிறுவர்களுக்கு மட்டும்தானா? இல்லை. பெரியோரும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

மற்றவர்களுக்கு முன்னிலையில் எச்சில் துப்புவது, மூக்குச் சிந்துவது முதலியவற்றைத் தடுக்க வேண்டும். கால்மேல் கால் போட்டுக் கொள்வதோ, முதுகுப் புறத்தைக் காட்டிக் கொண்டு அமர்ந்திருப்பதோ கூடாது என்று சொல்ல வேண்டும். கையைத் தாடையில் வைத்துக் கொள்வதும், தலையை முழங்காலில் சாய்த்துக் கொள்வதும் தகாதவை என்று எச்சரிக்க வேண்டும். “இவை இரண்டும் சோம்பேறித் தனத்தின் அறிகுறிகள்“ என்று கூற வேண்டும்.

பெரியோர் முன்னிலையில் எப்படி அமர்ந்திருக்க வேண்டும் என்று போதிக்க வேண்டும். “அதிகமாய்ப் பேசாதே! உண்மையோ, பொய்யோ – எதுவாயிருந்தாலும் தலையிலடித்துச் சத்தியம் செய்யாதே! இது கெட்டப் பழக்கம். பேச்சை நீயே ஆரம்பிக்காதே. பிறர் உன்னிடம் கேட்கும் கேள்விக்குப் பதில் கொடுத்தால் போதும்“ -இப்படியெல்லாம் விளக்க வேண்டும்.

வயதில் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களின் பேச்சை உற்றுக் கேட்க வேண்டும். அவர்களுக்காக இடம் விட்டு வசதி பண்ண வேண்டும். பெரியார்களுடன் பழகும் சந்தர்ப்பங்களில் கெட்ட வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது.

கெட்டவர்களோடு பழகவிடாமல் சிறுவனைத் தடுத்து வைப்பது தான் மிகவும் முக்கியமான காரியம். மீறினால் அடித்துப் பயமுறுத்த வேண்டும். பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு அவனுக்குப் பள்ளியின் களைப்புத் திரும்பும்படியான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். விளையாட்டினால் களைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். விளையாட்டை முற்றிலும் தடுத்து முழுக்க முழுக்க அவனைக் கல்வியில் ஈடுபடச் செய்வது சரியல்ல. இதனால் அவன் உள்ளம் மாண்டு போகிறது. அப்போது அவனுடைய கூர்மதி மங்கிப் போய் விடும். இன்பத்தையும் ஆடம்பரத்தையும் விளையாட்டையும் அது விரும்ப ஆரம்பித்து விடும். கல்வியின் பிடியிலிருந்து மீட்சி பெற வேண்டும் என்று அவன் துடிக்க ஆரம்பித்து விடுவான். பின்னர் ஏற்படுவது விபரீதமே!

பெற்றோர், சகோதரர்கள், ஆசிரியர்கள் மற்றும் வயதில் உயர்ந்த அனைவரின் வழிபாட்டுணர்ச்சியையும் அவன் பார்த்தறிய வேண்டும். பெற்றோருக்கெதிரில் அவனை விளையாட அனுமதிக்கக் கூடாது.

கருத்தறியும் பிராயம் வரும்போது பரிசுத்தம், தொழுகை முதலியவற்றில் அவன் கவனத்தைத் திருப்ப வேண்டும். ரமலான் மாதத்தில் சில தினங்களுக்கேனும் நோன்பு நோற்குமாறு அவனிடம் கூற வேண்டும். கட்டளையிட வேண்டும். பட்டாடை, பொன்னகை முதலியவற்றைத் தடை செய்ய வேண்டும். மார்க்கத்தின் வரம்புகளையும் மனிதன் நடக்க வேண்டியவற்றையும் எடுத்துரைக்க வேண்டும். திருடு, ஹராமான உணவு, மோசடி, பொய், இழி வார்த்தை இன்னும் சிறுவர்களுக்கு அடிக்கடி ஏற்படும் துர்க்குணங்கள் முதலியவற்றின் மீது அவனுடைய உள்ளத்தில் தனிப்பட்ட வெறுப்பையுண்டாக்க வேண்டும். சிறு வயதில் இத்தகைய எண்ணங்களை விதைத்து விட்டால் அவன் பிரயாத்தை அடையும் போது அவற்றின் அந்தரங்கங்களையும் மர்மங்களையும் அவனால் அறிந்து கொள்ள முடியும். உணவு என்பது மருந்து. இறை வழிபாட்டில் சோர்வு ஏற்படாமல் தடுப்பதற்கு இந்த மருந்து பயன்படுகிறது. அந்த அளவுக்குத் தான் நாம் உணவை விரும்ப வேண்டும் என்று எடுத்துரைக்க வேண்டும்.

மேலும் அவனுக்குப் போதிக்க வேண்டும். “இந்த உலகம் இருக்கிறதே, அது அடிப்படையற்றது, ஸ்திரமில்லாதது. அது நிரந்தரமாய் இருக்கும் என்றா எண்ணுகிறாய். நிரந்தரத்துவம் இம்மைக்கு கிடையாது. இம்மையின் இன்பங்கள் அனைத்தையும் மரணம் வெட்டி வீழ்த்தி விடுகிறது. இது நிலையற்ற உலகம். ஆம். மறுமைதான் நிலையான இன்ப உலகம். அது என்றைக்கும் அழியாது. அதன் நிலை என்றைக்கும் குலையாது. மரணம் ஒவ்வொரு வினாடியும் நம்மை அணுகிக் கொண்டிருக்கிறது. இம்மையை நல்ல முறையில் பயன்படுத்தி மறுமைக்கு வேண்டிய நன்மைகளைச் சேர்த்துக் கொள்பவனே உண்மையான அறிவாளி! இதனால் இறைவனிடத்தில் அவன் மதிப்பு உயரும். சுவனத்தில் அவனுக்கு அளிக்கப்படும் இன்பங்கள் விரியும்“

சிறுவன் நல்ல பண்புள்ளவனாயிருந்தால், இந்தப் போதனை அவன் உள்ளத்தில் குறிப்பிடத்தக்க பயனை விளைவித்து விடும். கல்லில் செதுக்கிய உருவத்தைப் போன்று அவன் மனத்தில் இக்கருத்துக்கள் செவ்வையாய்ப் பதிந்து விடும்.

இதற்கு மாற்றமாய்ச் சிறுவன் வளர்ந்தால் வீண் விளையாட்டு, ஆடம்பரம், உணவாசை, உடையாசை, பெருமை முதலியவற்றின் மீது அவனுக்கு ஆர்வம் ஏற்பட்டால், அவன் உள்ளம் உண்மையை ஒப்புக் கொள்ளத் தயங்குகிறது என்று புரிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் நாம் போதித்த போதனைகளின் விளைவுதான் இது. எனவே முதில் நாம் மிகவும் நிதானத்துடன் செயலாற்ற வேண்டும். குழந்தை என்னவோ பரிசுத்தமாய்த்தான் பிறக்கிறது. நல்லது, கெட்டது ஆகிய இரண்டையும் அது ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையது. ஆனால் பெற்றோர்களே இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்:

“ஒவ்வொரு குழந்தையும் இயற்கைத் தன்மையோடு தான் பிறக்கிறது. அதன் பெற்றோர் அதனை யூதனாக அல்லுது கிறித்துவனாக அல்லது நெருப்பு ஆராதனைக்காரனாக மாற்றிவிடுகிறார்கள்.“

சஹ்ல் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்:

"அப்போது எனக்கு வயது மூன்று. அப்போதிருந்தே இரவில் வணங்கும் பழக்கம் என்னிடம் தொடர்ந்து இருந்து வருகிறது. என் மாமா முஹம்மத் பின் ஸவார் அவர்களைப் பார்த்து நானும் வணங்குவேன். ஒருநாள் அவர்கள் என்னிடம் உன்னைப் படைத்த ஆண்டவனை நீ தியானிக்க வேண்டாமா?" என்றார்கள். இது ஆரம்பத்தில் நடந்தது. அப்போதெல்லாம் என் உள்ளத்தில் வணக்கத்தின் தித்திப்பு உண்டாகவில்லை.

"அவனை எப்படி நான் தியானிப்பேன்?" என்று நான் கேட்டேன். தியானத்தைப் பற்றி அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது.

"நீ உடையணியும் போது மனத்துக்குள்ளேயே "இறைவன் என்னோடிருக்கிறான். அவன் எல்லாவற்றையும் பார்க்கிறான். என் சாட்சியங்கள் அவனிடமே செல்கின்றன" என்று சொல்லிக் கொள். நாவு அசையக் கூடாது! தெரிந்ததா என்று விடையிறுத்தார்கள்."

"அவர்கள் கூறியது போல் சில நாட்கள் நடந்து வந்தேன். பின்னர் அவர்களை மறுபடியும் அணுகினேன்.

"தினம் ஏழு தடவை அவ்வாறு கூறிவா!" என்றார்கள்.

"அப்படியே சில நாட்கள் நடந்தேன். பின்னர் மறுபடியும் அவர்களை அணுகினேன்.

"தினம் பதினொரு தடவை சொல்லிவா!" என்று கட்டளையிட்டார்கள். இப்படி என்னை அவாக்ள் பழக்கப்படுத்தினார்கள். அதன்படி நானும் செயலாற்றினேன். அப்போது அந்தப் பயிற்சியில் நான் இனிப்பைக் கண்டேன். அந்தத் தியானத்தில் என்னுள்ளம் இனிமை கண்டது. இப்படியே ஓராண்டு கழிந்தது.

ஒரு நாள் மாமா என்னைக் கூப்பிட்டார்கள்.

"நான் உனக்குச் சொல்லிக் கொடுத்ததை நினைவில் வைத்துக் கொள். அதை எப்போதும் ஓதிக் கொண்டு வா. நீ மண்ணறையில் புகும்வரை தொடர்ந்து செயல்படுத்து. ஏனெனில், அது இம்மையிலும் மறுமையிலும் உனக்குப் பலனளிக்கும்" என்றார்கள்.

"பல்லாண்டுகள் அதைத் தொடர்ந்து செய்தேன். என் உள்ளத்தில் இனிமையை உணர்ந்தேன்.

"பின்னர் மறுபடியும் ஒருநாள் மாமா என்னைக் கூப்பிட்டார்கள்.

"சஹ்ல்! இறைவன் உன்னோடிருக்கிறான். அவன் எல்லாவற்றையும் பார்க்கிறான். அவனிடம் உன் சாட்சியம் செல்கிறது. அப்படியிருக்க நீ அவனுக்கு முரண் செய்யலாமா? அவனுடைய கட்டளைக்கு எதிராய் நடக்கலாமா? தீய செயல்கள் குறித்து உன்னை எச்சரிக்கிறேன்" என்றார்கள்.

"இதன் பின்னர் என்னுள்ளத்தில் இனமறியாத பேருக்கம் பிறந்தது. என் உள்ளத்தோடு நான் தனித்து உரையாட ஆரம்பித்தேன். அதன்பிறகு நான் பள்ளியில் சேர்க்கப்பட்டேன். ஆனால் நான் மறுத்தேன், மாமாவிடம் முறையிட்டேன்.

"எல்லா நேரமும் பள்ளியிலேயே இருப்பதால் ஆர்வம் குறையுமோ?" என்று வாதித்தேன்.

“மாமா சலுகை தந்தார்கள். ஆசிரியரிடம் தக்க ஏற்பாடு செய்தார்கள். அதன்படி குறிப்பிட்ட நேரத்தில் பாடம் படித்துக் காண்டு வீடு திரும்பி விடுவேன். குர்ஆன் ஓதினேன். மனனம் செய்தேன். அப்போது எனக்கு வயது ஆறு அல்லது ஏழு. காலமெல்லாம் நோன்பு நோற்றேன். பன்னிரண்டு ஆண்டுகள் வரை என் உணவு தொலிக் கோதுமை – அதிலிருந்து தயாரிக்கப்பட்ட ரொட்டி.

“எனக்கு வயது பதிமூன்றானபோது என் உள்ளத்தில் புதியதொரு பிரச்சினை தலை தூக்கிற்று. என் உறவினர்களிடம் அதைக் கூறினேன். என்னுடைய பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக “பஸ்ரா“விற்குப் புறப்பட்டேன். அங்கேயும் திருப்தியில்லை. என் வினாவிற்கு விடை கிடைக்கவில்லை. அங்குள்ள அறிஞர்கள் அனைவரிடமும் கேட்டுப் பார்த்தாகிவிட்டது.

“கடைசியாக அபூஹபீப் ஹம்ஸா அவர்களிடம் வந்தேன். அவர்கள் தாம் என் பிரச்சினையைத் தீர்த்தார்கள். என் வினாவிற்கு விடையிறுத்தார்கள். பல நாட்கள் அவர்கள் அண்மையிலேயேயிருந்து, அவர்களது நடையிலிருந்து என் நடையைத் திருத்திக் கொண்டேன்.

“பின்னர் ஊர் திரும்பி எளிய முறையில் வாழ்க்கையைத் துவக்கினேன். ஒரு தங்கக் காசுக்குக் கோதுமையை வாங்கி அதை இடித்:து ரொட்டி தயாரித்துப் புசிக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டேன். இந்த ரொட்டியில் உப்பும் போட்டுக் கொள்வது கிடையாது. இது எனக்குப் போதுமானது. இவ்வாறு நான் இருபது ஆண்டுகள் கழித்தேன். இதன்பிறகு பல்லாண்டுகள் பல இடங்களையும் சுற்றிப் பார்த்து இறைவனின் மகிமையை அறியும் பணியில் ஈடுபட்டேன். பின்னர் மறுபடியும் ஊர் திரும்பினேன். இப்போது இரவெல்லாம் நின்று வணங்கும் பழக்கம் தானாகவே எனக்கு வந்து விட்டது.“

இப்படிக் கூறுகிறார்கள் சஹ்ல் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். இவர்களைப் பற்றி, “அவர்கள் உப்பு உட்கொள்ள நான் பார்த்ததில்லை. இறக்கும்வரை அவர்கள் அப்படிச் செயலாற்றி விட்டார்கள்“ என்று அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள். எல்லாம் இறைவனின் பேரருள்.

*முற்றும்.*